விலை: 30.00
பக்கங்கள் - 24
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




*சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 01 வியாழக்கிழமை (16.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210*

## ரயில் மோதியதில் முதியவர் உயிரிழப்பு

### சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரியில் ரயில் மோதியதில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே 23

## வவுனியாவில் சிறுமி ஒருவர் சடலமாக மீட்பு



23

## கொரோனா பரவினால் மீண்டும் ஊரடங்கு

### சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸ் சமூக மட்டத்தில் பரவினால் மீண்டும் ஊரடங்குச் 23

## வயோதிபப் பெண்ணிடம் கொள்ளையடித்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)
தனித்து வாழ்ந்த வயோதிபப் பெண்ணை கத்தியைக் காட்டி அச்சுறுத்தி 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுத் 23

## யாழ்.மாவட்ட வேட்பாளர் மாரடைப்பால் மரணம்



23

### சுகாதார நடைமுறையைப் பின்பற்றாதோர்

# இன்று முதல் கட்டாயம் தனிமைப்படுத்தப்படுவர்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை



(கொழும்பு)

**சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்கள் இன்று முதல் கட்டாயம் தனிமைப்படுத்தப்படுவர் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அத்துடன் கந்தக்காடு போதைப் பொருள் புனர்வாழ்வு மையம் குறித்து பரவும் போலியான செய்திகள் குறித்து விசாரணை நடத்த 3 சிறப்பு விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்திற்கு வெளியே இது வரை 20 தொற்றாளர்கள் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ராஜாங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 16 பேர் 23

### பெப்ரவரி மாத மின் கட்டணமே

## மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கு அறவிடப்படும்

### மின்சக்தி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)
பெப்ரவரி மாத மின் பட்டியல் கட்டணமே அடுத்து வரும் மூன்று மாதங் 23

## யாழ்.உள்ளிட்ட 16 மாவட்டங்களில் கொரோனா பரவும் அபாயம்

### பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)
யாழ்ப்பாணம் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் கொரோனா பரவும் அபாயம் காணப்படுவதாக இலங்கை பொது சுகாதார பரிசோதர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் குறைந்தது ஒரு வாரத்திற்கேனும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு அரசி 23




## தேர்தல் விதிமீறல் வவுனியாவில் 12 பேர் கைது

(வவுனியா)
வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தேர் 23




## கொரோனா தகவலை அரசு மறைக்கிறதா?

### ஐ.தே.க தலைவர் கேள்வி

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களை அடையாளங்காண்பதற்கான பி.சி.ஆர் பரிசோத 23

## கொரோனா தக...

பக்கத்தில் காணொளியொன்றைப் பகிர்ந்து, பதிவொன்றையும் செய்திருக்கும் அவர் இதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது:

கோவிட் - 19 பரவலின் இரண்டாம் அலை தற்போது ஆரம்பமாகியிருக்கிறது என்று குறிப்பிட முடியும். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதை முன்நிறுத்தி நான் வெளியிட்ட கருத்துக்களை "அரசாங்கத்துடன் டீல் செய்வ தாகக்" கூறியவர்களுக்கு இப்போதுதான் உண்மைநிலை விளங்குகின்றது. வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரியுங்கள் என்பதே எமது டீலாகக் காணப்பட்டது. ஆனால் அரசாங்கம் அதனைச் செய்யாமையினால் தற்போது நாமும் அதுபற்றிய விமர்சனங்களை முன்வைக்க வேண்டியிருக்கிறது.

நாளொன்றுக்கு 5000 பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு நாம் கோரினோம். ஆனால் அவ்வேளையில் விரைவாகப் பொதுத்தேர்தலை நடத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவை வற்புறுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருந் தது. நாம் கோரிய போதே பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தால் இப்போது பொதுஜன பெரமுன தேர்தல் பிரசாரங்களைப் பிற்போட வேண்டிய தேவையேற் பட்டிருக்காது. அதேநேரம் மற்றொருவர் "கொரோனா மீண்டும் பரவாதா? தேர்தலை சற்றுப் பிற்போட முடியாதா? ஏனெனில் தேர்தலுக்குச் செலவழிப்பதற்கு எம்மிடம் நிதியில்லை" என்கிறார். உண்மையில் இப்போது பணத்தைச் சேர்ப்பது மிகவும் கடினமான விடயமாகத்தான் தெரிகிறது. அதனை விடவும் கல்லில் நீர் எடுப்பது இலகுவானது என்று தோன்றுகிறது.

மேலும், கொரோனா வைரஸின் உண்மையான தாக்கத்தை வெளியிடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். அண்மையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் அதானொம் டெட் றோஸ் வெளியிட்ட கருத்தின்படி கடந்த மே மாத இறுதியிலிருந்து ஜூலை மாத ஆரம்பம் வரையில் உலகில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்திருக்கிறது.

எனவே இன்னமும் கொரோனா வைரஸ பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவில்லை. ஆனால் அரசாங்கம் இது குறித்து எத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டது? என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார். (ம-3)

### யாழில் குப்பைகளை வீதியில் வீசிய

# 5 குடியிருப்பாளர்களுக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் திண்மக் கழிவை வீதியில் வீசி டெங்கு மற்றும் கோவிட் - 19 நோய்த் தொற்று பரவலுக்கு ஏதுநிலையை ஏற்படுத்திய குற்றத்துக்கு 5 குடியிருப்பாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ சுகாதார அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரால் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்குகளிலேயே இவ்வாறு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள் ளது.

நாட்டில் முதன்முறையாக திண்மக் கழிவுகளை பொது இடத்தில் வீசியதால் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு ஏதுநிலையை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் சுகாதாரத் துறையினரால் வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரில் திண்மக் கழிவை வீதியில் வீசி டெங்கு மற்றும் கோவிட் -19 நோய்த் தொற்று பரவலுக்கு ஏதுநிலையை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் 5 குடியிருப்பாளர்கள் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் நேற்று புதன்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

தம் மீதான குற்றச்சாட்டை 5 குடியிருப்பாளர்களும் ஏற்றுக்கொண்டனர். அதனால் அவர்கள் ஐவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதவான் நளினி சுதாகரன் உத்தரவிட்டார். (ம-3)

# பல்கலை மாணவர்கள் வளாகத்தை விட்டு வெளியேறத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள விவசாயம், தொழில்நுட்ப பீடங்களின் விடுதியில் உள்ள இறுதி ஆண்டு மாணவர்கள் அனைவரும் பரீட்சைகள் நிறைவடையும் நாள்வரை வளாகத்தைவிட்டு வெளியேற முடியாது என்று மத்திய சுகாதார அமைச்சால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களும் வளாகத்துக்குள் நடமாட முடியும். எனினும் எந்தவொரு மாணவரும் வளாகத்தைவிட்டு வெளியேறி மீள வளாகத்துக்குள் வர முடியாது என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள விவசாயம், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்களின் பரீட்சை நடவடிக்கைகள் இன்று வழமைக்குத் திரும்பும் என்று வளாகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள தொழில்நுட் பபீடத்தில் கல்வி பயிலும் மாணவிக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என அவரது உயிரியல் மாதிரிகளின் பிசிஆர் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. அவரது பெற்றோரின் பிசிஆர் பரிசோதனை முடிவிலும் அவர்களுக்கு இல்லை என்று தெரியவந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# யாழில் நேற்றும் 148 பேருக்கு கொரோனாப் பரிசோதனை

### எவருக்கும் தொற்றில்லை

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் நேற்றுப் புதன்கிழமை(15) 148பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும், எவருக்கும் கொரோனாத் தொற்றுக்கள் இல்லையெனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.




அந்தவகையில், முல்லைத்தீவு விமானப்படையினர் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 98 பேர், பூவரசங்குளம் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 29 பேர், விடத்தற்பளை தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 9 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 5 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 4 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட 2 பேர், மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3.18)


## பதவி வெற்றிடம்

தமிழ் ரைப்பிங், பக்க வடிவமைப்பு, விளம்பரம் (கறுப்பு வெள்ளை மற்றும் கலர்) செய்யக் கூடியவர்கள் (இருபாலாரும்) உடன் தேவை.

**தொடர்பு : 077 315 1326**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிந்தாமணி விநாயகர் சனசமூக நிலைய தலைவரும் யா/ஞானசாரியார் கல்லூரி அதிபரும் ஆகிய திரு. கந்தசாமி கண்ணன் அவர்கள் அதிபர் தரம் I இல்(SLPS I) பதவி உயர்வு பெற்றமைக்காகவும் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெறவும் வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்
சிந்தாமணி விநாயகர் சனசமூக நிலையம், கரவெட்டி.

(C-9901)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்



## திருமதி உருத்திராதேவி சண்முகநாதன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொழும்பு மியூசியஸ் மகளிர் கல்லூரி, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியையும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய திருமதி உருத்திராதேவி சண்முகநாதன் நேற்று (15.07.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - பாக்கியம் தம்பதிகளின் புதல்வியும் சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாலிங்கம் - அகிலாண்டம், காலஞ்சென்ற செல்வராஜா - வாசஸ்பதி, செல்வி வைரமுத்து ரவீந்திரராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜயலக்ஷ்மன்மோகன், ஜயதேஷ்மன் சுரேஷ்(UK), ஜயரோஷ்மன்கேதீஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீவள்ளி, ஜோய்பத்மகாந்தி, ஜெயப்பிரதாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும் விவேகானந்தன், ஸ்ரீ ஹரன், ஸ்ரீஜயன், ஸ்ரீநிதி, ஸ்ரீ கஜன் ஆகியோரின் சித்தியும் றொஷான், விமுக்தி, சக்தி, கிருஷாரா, ஜெரமிதர்ஷன், யஷ்வந்தன், யுதிஷ்ரன், சரிக்கா, அபி, ஜோயல், ஜோயனா, ஜேடன், ஜெரமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2020) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.23, டச் வீதி,
சாவகச்சேரி.

(C-9902)

தகவல்:-
குடும்பத்தினர்

# 13 ஆவது திருத்தத்தை இரத்து செய்ய அனுமதியேன்

## வாசுதேவ திட்டவட்டம்



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் அதனூடாக அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வாசுதேவ நாணயக்கார, இதற்காக தொடர்ந்து குரல் கொடுப்பேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வாக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்குவதாக ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது சாத்தியமற்ற செயற்பாடு என்றும் அவர் கூறினார்.

13 ஆவது திருத்தம் இரு நாடுகளை அடிப்படையாகக் கொண்டது என்பதை மறந்து விட முடியாது என சுட்டிக்காட்டிய வாசுதேவ நாணயக்கார, மாகாண சபை முறைமையின் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை புரிந்துகொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பழைய தேர்தல் முறைமையில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு மாத்திரமல்ல அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரம் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (ஜ-4)

# நிபந்தனைகளுக்கு அடிபணிந்து அரசியலமைப்பை திருத்த வேண்டிய அவசியமில்லை - நாமல்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனும் ஒப்பந்த அரசியல் செய்ய வேண்டிய தேவை, பொதுஜன பெரமுனவிற்கு கிடையாது. அரசியல்வாதிகளின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து அரசியலமைப்பினை திருத்த வேண்டிய தேவை கிடையாது.

தீவிரவாத மற்றும் அடிப்படைவாத கொள்கைகளை உடைய அரசியல்வாதிகளுடன் ஒருபோதும் ஒன்றிணைய மாட்டோம். தமிழ்-முஸ்லிம் சமூகத்தினருக்கு பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து இன மக்களின் ஆதரவுடன் சிறந்த தேசியத்தை கட்டியெழுப்புவோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் முஸ்லிம் சமூகத்தினருக்கும் இடையில் ஆரம்ப காலத்தில் இருந்து நெருங்கிய உறவுநிலை காணப்படுகிறது. இந்த உறவு இலங்கையினை மாத்திரம் வரையறுத்தது அல்ல. சர்வதேச முஸ்லிம் சமூகத்தினருடன் நெருங்கிய நல்லுறவு காணப்படுகிறது. அதுவே எமது ஆட்சியின் பலமாக காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டுக்கு பிறகு சர்வதேச உறவுகள் குறுகிய நிலைக்குள் தள்ளப்பட்டன.

வடக்கிலும் தெற்கிலும் இளைஞர்கள் ஆயுதமேந்தி போராட்டங்களில் ஈடுபடுவதற்கு ஆரம்பகால அரசியல் தலைமைகளின் தவறான அரசியல் தீர்மானங்களே காரணம். 30 வருடகால சிவில் யுத்தம் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்பின் ஊடாக தோற்கடிக்கப்பட்டு சுதந்திரம் ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த அரசாங்கத்தில் இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படவில்லை. மாறாக இனங்களுக்கிடையில் பிரிவினைவாதம் தோற்றுவிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் மக்கள் செய்த தவறை இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் திருத்திக்கொண்டார்கள். பொதுத்தேர்தலிலும் தவறுகள் திருத்தப்படும். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் ஒப்பந்த அரசியல் செய்ய வேண்டிய தேவை எமக்கு கிடையாது. இவர்களின் அரசியல் கொள்கைகள் முற்றிலும் மாறுபட்டது. இரு தரப்பினரும் ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாது.

தீவிரவாதம் மற்றும் பிரித்தாளும்கொள்கையினை கொண்டவர்களை புதிய அரசாங்கத்தில் ஒருபோதும் இணைத்துக் கொள்ளமாட்டோம். முஸ்லிம், தமிழ் சமூகத்தினருக்கு பொதுஜன பெரமுனவில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து இனவாதமற்ற தேசியத்தை நிச்சயம் கட்டியெழுப்புவோம் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

## 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

# ராஜித உட்பட ஆறு பேர் ஜனாதிபதி ஆணைக்குழுவில்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட ஆறு பேர் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகினர்.

வடமேல் மாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் டி.கே.பி. தஸநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே அவர்கள் முன்னிலையாகினர்.

2008 ஆம் ஆண்டில் 11 இளைஞர்கள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் போலியான சாட்சியங்களை உருவாக்கி தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதாக ரியர் அட்மிரல் டி.கே.பி. தஸநாயக்கவினால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

குறித்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளான ஆறு பேருக்கு கடந்த 6 ஆம் திகதி அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது. இதன்படி ராஜித சேனாரத்ன, ரஞ்சித் மத்துமபண்டார, ரஞ்சன் ராமநாயக்க, அஜித் பி.பெரேரா, டி.எம்.சுவாமிநாதன், ஜே.சி.அலவத்துவல மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ரவி வித்யாலங்கார ஆகியோர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# பேருந்துகளில் பயணிப்போர் முகக்கவசம் அணிவது கட்டாயம்

## சட்டநடவடிக்கை என்கிறது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

பேருந்துகளில் பயணிக்கும் அனைவரும் முகக்கவசம் அணிவது கட்டாயம் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பேருந்துகளில் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியுமெனவும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கொமாண்டர் நிலான் மிரெண்டா தெரிவித்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வகையில் செயற்படும் பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முகக்கவசம் அணிந்து வருவோரை மாத்திரம் பேருந்துக்குள் அனுமதிக்குமாறும், நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோரும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத பேருந்துகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய முடியும் என்றும் பொதுமக்களுக்கு அவர் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)



# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் நாடுகடத்தப்பட்ட ஐவரில் நால்வர் விடுதலை



(கொழும்பு)

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறன்று நாட்டில் இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதல்களை மையப்படுத்தி இடம்பெறும் விசாரணைகளில், டுபாயிலிருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஐவரில் நான்கு பேரை நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் லங்க அஜயரத்ன விடுதலை செய்து உத்தரவிட்டார்.

குறித்த நான்கு பேரும் பயங்கரவாத நடவடிக்கைகளுடனோ அல்லது அடிப்படைவாத செயற்பாடுகளுடனோ எந்த தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை என்பது சி.ஐ.டி. விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களை விடுவிக்குமாறு சி.ஐ.டியினர் நேற்று முன்தினம் மன்றில் முன்வைத்த விசேட கோரிக்கைக்கு அமைய நீதவான் அவர்களை விடுதலை செய்து உத்தரவிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி நாடு கடத்தப்பட்ட ஐவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சி.ஐ.டியினர் கைது செய்து பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் காவல் உத்தரவை பெற்றுக் கொண்ட நிலையில், விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.குறித்த ஐவரும், கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து, டுபாயில் கைது செய்யப்பட்டு அங்கு தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இந் நிலையிலேயே அவர்கள் நாடு கடத்தப்பட்ட நிலையில் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டனர்.

ஐவரில் 2 ஆம் சந்தேக நபரான எம்.எல். ஷிஹான் அஹமட் தொடர்ந்தும் சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும், ஏனைய நால்வர் குறித்த தடுப்புக் காவல் விசாரணைகளிலும் அவர்கள் பயங்கரவாத, அடிப்படைவாத நடவடிக்கைகளுடன் தொடர்பற்றவர்கள் என தெரியவந்ததாகவும் சி.ஐ.டியினர் நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் கூறினர்.

" பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. அதில் அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான குற்றங்களை புரிந்ததாகவோ வேறு விடயங்களோ வெளிப்படுத்தப்படாமையால் அவர்களை விடுதலைச்செய்கின்றேன். "என நீதவான் தனது உத்தரவில் கூறினார்.

இந் நிலையில் இந்த சம்பவங்கள் தொடர்பில் சி.ஐ.டி.இன் 15 சிறப்பு குழுக்களும் சி.ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவும், சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவும் சிறப்பு விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இணைப்பற்ற இதயத்துடிப்புமானி ஜனாதிபதியிடம்



(கொழும்பு)

உயர் தரத்தில் கல்விகற்கும் மாணவர் ஒருவர் உருவாக்கிய இணைப்பற்ற இதயத்துடிப்புமானி (stethoscope) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி நேற்று முன்தினம் தலதா மாளிகைக்கு சென்ற சந்தர்ப்பத்தில் வெனுர விஜேசேகர என்ற உயர்தர மாணவன் தமது கண்டுபிடிப்பு தொடர்பாக ஜனாதிபதியை தெளிவுபடுத்தினார். உபகரணத்தை பரீட்சித்த ஜனாதிபதி, மாணவனின் திறமையை பாராட்டினார்.

வெனுர விஜேசேகர கண்டி திருத்துவக் கல்லூரியில் க.பொ.த உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்று வருகிறார். (ஐ-4)

## குணமடைந்தோர் 2001

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டாயிரத்தை கடந்துள்ளது.நேற்று முன்தினம் மேலும் 13 பேர் குணமடைந்த நிலையில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2001 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)


பாராளுமன்ற தேர்தல் – 2020 | யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக... 105 நாட்கள்
(கார்த்திகை 2019 - இன்று வரை)

நிறைவான கிராமம் - சப்ரிகம

நிறைவான கிராமம்
சமூக மட்ட கிராமிய அபிவிருத்தி திட்டம்

| மொத்த செயற்றிட்டங்கள் | பயன்பெற்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் | பயன்பெற்ற கிராம சேவையாளர் பிரிவுகள் |
|---|---|---|
| 689 | 15 | 435 |
| **மொத்த பயனாளிகள்** | **வீதி அபிவிருத்தி திட்டங்கள்** | **நீர்ப்பாசன திட்டங்கள்** |
| 175,000+ | 542 | 35 |

ஒதுக்கப்பட்ட முழுத்தொகை
ரூ.870,000,000

வீட்டுத்திட்டங்கள்

மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத்திட்டத்தினூடாக 540 வீடுகளை பகிர்ந்தளித்தமை

புதிய தொழில்நுட்ப "கொங்கிரீட் பனல்" வீடுகள் வழங்கும் திட்டத்தினூடாக 80 வீடுகளை வழங்கியமை

"அனைவருக்கும் ஒரு வீடு" - திட்டத்தினூடாக(NHDA) 160 வீடுகளை வழங்கியமை

நலன்புரி நிலையங்களில் வசிக்கும் 70 குடும்பங்களுக்கு காணியுடன் கூடிய வீட்டுத்திட்டம் வழங்க ஏற்பாடு செய்தமை

ஏனைய உதவித்திட்டங்கள்

"100,000 கி.மீ" அபிவிருத்தி திட்டத்தினூடாக வீதி அபிவிருத்திகளை மேற்கொண்டமை

"100,000 நீரிணைப்புக்கள்" திட்டத்தினூடாக நீரற்ற பிரதேசங்களுக்கு நீர்வழங்கல் பொறிமுறையை உண்டாக்கியமை

"100,000 வேலைவாய்ப்பு" திட்டத்தினூடாக புதிய வேலைவாய்ப்புக்களை பெற்று கொடுத்தமை

54,000 பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தினூடாக வேலைவாய்ப்புக்களை வழங்கியமை

ஆலயங்களின் புனருத்தாரண பணிக்காக விசேட நிதியை ஒதுக்கியமை



X 1 அங்கஜன் இராமநாதன்

என் கனவு யாழ்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - Sri Lanka Freedom Party (C-050)

# இராசிபலன்

16.07.2020
ஆடி 01, வியாழக்கிழமை,
ஏகாதசி முன்னிரவு 11.12 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 6.58 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை
சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம்
ஏகாதசி விரதம் வளவன்


மேஷம்
காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்


ரிஷபம்
கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.


மிதுனம்
எடுத்த காரியத்தை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.


கடகம்
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள்.


சிம்மம்
கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி
மறைமுக எதிர்ப்புகள் மாறும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.


துலாம்
மறதியால் சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


விருச்சிகம்
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு
கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், போசன சுகமுண்டு.


மகரம்
எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.


கும்பம்
தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.


மீனம்
பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமைகள் கூடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

ஆராய்ந்து நட்புகொள், நட்பு கொண்ட பிறகு ஆராயாதே

# கொரோனாவை கட்டுப்படுத்தாத அரசு அரசியல் பலத்தை தக்கவைக்க முயற்சி

(கொழும்பு)

**யுத்தத்தை வெற்றி கொண்டதாக பெருமை கொள்ளும் அரசாங்கம், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி நாட்டு மக்களை பாதுகாக்க முயற்சிக்காமல், தங்களது பலத்தை தக்கவைத்துக் கொள்ளவே தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன குற்றஞ்சாட்டினார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கடந்த காலங்களிலே சாக்ஸ், எச்.வன்.என்.வன் போன்ற தொற்று நோய்கள் வெளிநாடுகளில் பரவியிருந்த போதிலும் எமது நாட்டுக்குள் அவற்றின் தாக்கம் ஏற்படாத வகையில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. மலேரியாவையும் வெற்றி கண்டுள்ளோம்.

இந்நிலையில் இலங்கை ஒருதீவு என்ற வகையில் விமான நிலையத்தின் ஊடாகவே வைரஸ் பரவல் இடம் பெறும் வாய்ப்பு உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் உரிய பாதுகாப்பு விதிகளை செயற்படுத்தியிருந்தால். வைரஸ் நாட்டுக்குள் வந்திருக்காது.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் நாங்கள் எச்சரிக்கை விடுத்து வந்த போதிலும் அமைதி காத்து வந்த அரசாங்கம், வைரஸ் நாட்டுக்குள் வந்ததன் பின்னரே நாட்டை முடக்கி வைக்க தீர்மானித்தது. நாட்டில் யுத்தம் இடம்பெற்ற போதிலும் நாடு திறந்துவைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு வைரசுக்காக அஞ்சி நாட்டை முடக்கமுடியாது என்றார்கள். யுத்தத்தை வெற்றி கொண்டதாக கூறியே இவர்கள் பெருமைப்பட்டு வருகின்றனர்.

இலங்கை போன்ற ஏனைய தீவு நாடுகள் தங்கள் நாட்டுக்



குள் வைரஸ் பரவாத வகையில் உரிய நடவடிக்கைகளை எடுத்து தடுத்துக் கொண்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கு வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு முன்னர் தங்களது பலத்தை தக்கவைத்துக் கொள்வதிலேயே அக்கறை செலுத்தி வருகிறது என அவர் குற்றம்சாட்டினார். (ஜ-4)

# இலங்கை மற்றும் மாலைதீவுக்கான றோட்டறி ஆளுநராக அஜித் வீரசிங்க

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான றோட்டறி மாவட்டத்தின் புதிய ஆளுநராக நீர்கொழும்பு றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும், இலங்கையின் முன்னணி தொழில் முயற்சியாளரும், தொழிலதிபருமான றொட்டேரியன் அஜித் வீரசிங்க பதவியேற்றிருக்கிறார். இதன் மூலம் இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த 2 ஆயிரம் றோட்டறி அங்கத்தவர்களையும், 5 ஆயிரத்து 800 றோட்டறக்ட் உறுப்பினர்களையும், 6 ஆயிரத்து 200 பாடசாலை மாணவர்களான இன்ரக்ட் உறுப்பினர்களையும் தலைமையேற்று வழிநடத்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட ஒரேயொரு சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனமான றோட்டறி சர்வதேசத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான 73 கழகங்களைக் கொண்ட மாவட்டம் 3220 இன் புதிய ஆளுநராகவே அஜித் வீரசிங்க இம்மாதம் முதலாம் திகதி முதல் பதவியேற்றுள்ளார்.

நாட்டில் கொரோனாப் பெருந்தொற்றுக் காலப்பகுதியில், தொற்றை வெற்றி கரமாக எதிர்கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு றோட்டறி மாவட்டம் 3220 பெரும் பக்கபலமாக உதவிகளைச் செய்திருப்பதுடன், 'Rotary Opens Opportunities' என்ற தொனிப் பொரு



ளுடன் தனது தலைமையின் கீழ் கொரோனாப் பெருந்தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான செயற்றிட்டத்துக்கு மாவட்ட ஆளுநர் றொட்டேரியன் அஜித் வீரசிங்க முன்னுரிமை கொடுத்துச் செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மாலைதீவிலிருந்து 177 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

மாலைதீவில் சிக்கியிருந்த 177 இலங்கையர்கள் நேற்று பிற்பகல் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களை ஏற்றியபடி யுஎல்-102 இலக்கமுடைய இலங்கை எயார் லைன்ஸ் விமானம் நேற்று பிற்பகல் 3.10 மணிக்கு மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியது.

நாடு திரும்பியவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலாத்துறையில் பணி புரிந்தவர்கள் ஆவர்.

அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர்.பரிசோதனைக் குட்படுத்தப்பட்டனர். (ஜ-4)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் ஜெயக்குமாரி பத்மராஜா



எமது வலயத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வி நிர்வாகப் பிரிவில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. **கு.விஜயகுமார்** அவர்களின் அன்புச் சகோதரி அமரர் **ஜெயக்குமாரி பத்மராஜா** அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வி நிர்வாகப் பிரிவு, யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம், நல்லூர்.**

# மதுவரித் திணைக்களத்தால் பீடிகள் எரித்தழிப்பு



(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பீடி கட்டுக்கள் உதவி மதுவரி ஆணையாளரின் பணிப்புரைக்கிணங்க மதுவரித் திணைக்களத்தினரால் எரித்தழிக்கப்பட்டன.

கடந்த 26 ஆம் திகதி இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடிக்கட்டுகள் வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப்பகுதியில் மதுவரித் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டன.

இதன்போது இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் புகையிலை வரி சட்டத்தின் கீழ் 2 லட்சம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்டஒரு லட்சத்து 32 ஆயிரம் பீடிகள் நேற்று யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் மற்றும் மதுவரி அத்தியட்சகர் கிருபாகரன் ஆகியோர் முன்னிலையில் யாழ்ப்பாணம் கொம்பன் பட கோமட மயானத்தில் எரித்து அழிக்கப்பட்டன. (4-5-33)

# சி.சி.ரி.வி.கமராவில் சிக்கிய திருட்டுக் கும்பல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியின் உடுப்பிட்டி பண்டகை பிள்ளையார் ஆலயத்தில் சிசிரிவி கமராக்களை அணைத்து கொள்ளையிட முற்பட்ட கும்பலொன்று அகப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் திருட்டுக்களைத் தடுக்க புலம்பெயர் மக்கள் உதவியுடன் அப்பகுதிகளிலுள்ள ஆலயங்களில் சிசிரிவி கமராக்கள் அண்மையில் பொருத்தப்பட்டன.

இவ்வாறு பண்டகை பிள்ளையார் ஆலயத்திலும் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகின்ற நிலையில் அண்மையில் சிசிரிவி கமராக்களை செயலிழக்க செய்து கொள்ளை முயற்சியில் ஈடுபட்டமை அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் ஆலய கொள்ளை முயற்சியில் ஈடுபட்டு அம்பலமாகிய நபர் கைதாகி விடுவிக்கப்பட்டுள்ளார்.

சில வருடங்களிற்கு முன்னரும் ஆலயத்தில் பல இலட்சம் பெறுமதியான தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (5-8)

# நல்லூர் உற்சவ காலத்தில் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் கோவிலின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் கொரோனா தொற்றின் இரண்டாம் அலை தீவிரமடைந்துள்ளதால் பொதுமக்கள் பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவுறுத்தியுள்ளனர். அவ் அறிவுறுத்தல்களாவன,

1. நல்லூர் ஆலய வளாகத்தினுள் நுழையும் பக்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும். இதை நடைமுறைப்படுத்துவதற்கு பாதுகாப்பு பிரிவினருக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் பக்தர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

2. அனைத்து பக்தர்களும் முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

3. பக்தர்கள் அனைவரும் சமூக இடைவெளியினை பேணுதல் அவசியமாகும்.

4.பக்தர்கள் கோயில் சூழலில் மிகக் குறைந்த நேரத்தை மாத்திரம் செலவிட வேண்டும். தேவையற்ற விதத்தில் உலா வருவதை தவிர்த்துக் கொள்ளல் சிறந்தது.

5. வயோதிபர்கள், சுகவீனமுற்றோர் ஆலயத்திற்கு வருகை தருவதை தவிர்த்துக் கொள்ளல் சிறந்தது.

6. குழுக்களாக ஒன்றுகூடி ஆராதனை செய்தல் (பஜனை) தடை செய்யப்பட்டுள்ளது.

சுய தனிமைப்படுத்தல், கட்டாய தனிமைப்படுத்தலை பூர்த்தி செய்தோர் (உதாரணமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தோர்) அதற்குரிய சான்றிதழை ஆலயச்சூழலில் நடமாடும் சந்தர்ப்பத்தில் தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்.

7. மண்டபபடி வைத்தல், பிரசாதங்கள் வழங்கல், தாக சாந்தி வழங்கல், தானங்கள் வழங்கல், அன்னதானம் வழங்கல் ஆலயச் சூழலில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.


8. அடியார்கள் அங்கப்பிரதட்சணம் செய்தல், காவடி எடுத்தல், தூக்குக்காவடி எடுத்தல், கற்பூர சட்டி எடுத்தல் மற்றும் அடி அழித்தல் போன்ற நோய்க் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க முடியாத வழிபாட்டு முறைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

9. ஆலய வீதிகளில் சூழவுள்ள மண்டபங்களில் கூட்டுப் பிரார்த்தனை, பிரசங்கங்கள், தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசையரங்குகள், மற்றும் கலை நிகழ்வுகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன.

10, ஆலய வீதிகளில் பொழுது போக்கிற்கான அனைத்து நிகழ்வுகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

11.மேற்குறித்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேலதிக சுகாதார நடைமுறை தளர்வுகள் ஏற்படும் வரை அனைத்து விதமான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளையும் பின் பற்றுவது கட்டாயமானதாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# சந்தேக நபர் வாளுடன் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்திய சாலை வீதியில் கடை உரிமையாளர் ஒருவர் கடந்த 9 ஆம் திகதி யாழ்.வைத்திய சாலை வீதியில் சென்றபோது கத்தியால் குத்தி காயப்படுத்திய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் கைது செய்யப்படும் போது அவரிடமிருந்து ஒரு வாள், 2 இரும்புக் கம்பிகள், ஒரு கிரிக்கெட் விக்கட் என்பன கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (5-8-32)




# மோ.சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி -நுணாவில் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றது.

இவ் விபத்தில் நுணாவில் பகுதியைச் சேர்ந்த க.ரவி (வயது-46), மீசாலையைச் சேர்ந்த ஜெய்சங்கர் (வயது-34) மற்றும் மீசாலை வடக்கைச் சேர்ந்த செ.ரிசர்பன் (வயது-36) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (4-5-30)



யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனுக்கும் கிராம உத்தியோகத்தர் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை முற்பகல் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

(படம்:-குப்பிழான் செய்தியாளர்)



பிரதேச செயலகத்தினூடாக சமூக சேவை திணைக்களத்தினால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி, வெள்ளைப் பிரம்பு, நடைச்சட்டம், மூக்குக்கண்ணாடி என்பன வழங்கப்பட்டன.

(படம்: கரணவாய் செய்தியாளர்)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

## வடமாகாண சுகாதார திணைக்களம்

### வைத்தியசாலைக்கு மூல உணவுகளை வழங்குவதற்கான பெறுகைகள் – 2020/2021

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள கீழ் வரும் வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| விபரங்கள் | தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை | வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை | மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை | முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை |
|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | NP/21/05/Diet/ BHTEL/2020 | NP/21/05/Diet/ DGHKOC/2020 | NP/21/05/Diet/ DGHVAV/2020 | NP/21/05/Diet/ DGHMAN/2020 | NP/21/05/Diet/ DGHMUL/2020 |
| பெறுகை ஆவணங்களை பெறும் முகவரி | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 021 222 6253 | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி 021 228 4111 | வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி வவுனியா 024 222 8094 | மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார் 023 225 1550 | முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு 021 206 1423 |
| பெறுகைப் பாதுகாப்பு பிணைத்தொகை | Rs. 150,000/= | Rs. 150,000/= | Rs. 250,000/= | Rs. 120,000/= | Rs. 140,000/= |
| மீளளிக்கப்படாத வைப்பு | Rs. 3500/= | Rs. 3500/= | Rs. 4000/= | Rs. 3500/= | Rs. 3500/= |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

    அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    ஆ. அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    இ. அத்துடன் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் வேலைநாட்களில் 17 ஜீலை 2020 ஆம் திகதி தொடக்கம் 29 ஜீலை 2020 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மேலே தெரிவிக்கப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 30 ஜீலை 2020 ஆம் திகதி 10:00 மணிக்கு முன்பதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், வடமாகாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 24 ஜீலை 2020 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு நடைபெறும்.

    வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

09. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு**
**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்,**
**தொ.பே - 021 222 0811, 021 222 0812, 021 222 0839**
**தொலைநகல்: 021 222 0818, 021 221 7905**
**மின்னஞ்சல்:** capdhsnp@gmail.com

(C-9898)

## மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்

## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணத்தின் கீழ் இயங்கும் அச்சுவேலி, மருந்து உற்பத்திப் பிரிவின் பாவனைக்கு உதவாத இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 31.07.2020 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு மருந்து உற்பத்தி பிரிவின் வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. ஏல விற்பனைக்கான பொருட்களை 17.07.2020 - 30.07.2020 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் மருந்து உற்பத்திப் பிரிவு, அச்சுவேலியில் நேரடியாக சென்று பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருட்களை பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே முழுப்பணத்தினையும் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

**மாகாண ஆணையாளர்,**
**சுதேச மருத்துவத் திணைக்களம்,**
**தொலைபேசி - 021 222 0824**

**இல.611, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

(C-9897)

# கொரோனா பரவல் குறித்து தவறான தகவல்களை பரப்புவோருக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

கொரோனாத் தொற்றுத் தொடர்பாக தவறான தகவல்களை பரப்புவோர் குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தலில் உள்ளோரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் என உண்மைக்குப் புறம்பான தகவல்களை பரப்புவதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே இவ்வாறு தவறான தகவல்களை பரப்புவோர் குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதற்கு அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், கொரோனா தொற்றுக்குள்ளானோர் மற்றும் அவர்களோடு தொடர்புகளைப் பேணியவர்களை அடையாளம் காணல் மற்றும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## நால்வர் கைது

(டயகம)

டயகம-அக்கரப்பத்தனை - கிலோஸ்கோ தோட்டத்தில் பொதுத் தேர்தலில் சுயாதீனமாகப் போட்டியிடும் இரு குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்தல் தொடர்பிலான காட்சிப்படுத்தல்களை நீக்கியமை தொடர்பில் இவ்வாறு மோதல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 26 செவ் 5 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBa, MBA, Accountant (Finance Executive Private)<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச உத்தியோகம் கொழும்பில் வசிப்பவர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10966 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 13 செவ் 9 இல் உயரம்: 164cm<br>தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வங்கி, அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/8459 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10968 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 46 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8461 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 55 செவ் 7 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.பிரான்ஸில் வேலை செய்கின்றார் PR இல்லை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், PR உள்ள வெளிநாட்டுப் பெண்<br>தொ.இ: B/10972 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 29 3/4 சூரி,செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ITN network<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, கொழும்பில் வேலை செய்பவர் விரும்பத்தக்கது, வெளிநாடும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/8471 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: - செவ் 10 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ/த. நிரந்தர சொந்த வர்த்தகம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10973 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: - செவ் 6 இல்<br>தகைமை/தொழில்: மருத்துவபீடம் பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: MBBS, Engineer(gov)<br>தொ.இ: G/8476 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# கொரோனாவை பரிசளித்த கோட்டாபய அரசு

## ரவி சாடல்



(ஏறாவூர்)

இந்த அரசாங்கம் ஆட்சி ஏற்று பரிசாகக் கொரோனாவையே தந்திருக்கின்றது என முன்னாள் அமைச்சர் ரவி கருணநாயக்க சாடினார்.

மட்டக்களப்பு வாடிவீடு விடுதியில் நேற்று ஆதரவாளர்களை சந்தித்து கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


புதிய ஜனாதிபதி அரசை பொறுப்பேற்று 8 மாத காலமாக நாங்கள் எதிர்க் கட்சியிலுள்ளோம். இந்த 8 மாதத்தில் ஜீவனோபாய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இவர்களுக்குத் தெரியாது எவ்வாறு வழிநடத்துவது என. நாங்கள் ஆட்சியில் இருந்த போது பால்மாவின் விலை 320 ரூபா. தற்போது 420 ரூபா. சீனி 80 ரூபாவாக இருந்து தற்போது 155 ரூபா, ரின் மீன் 140 ரூபாவாக இருந்தது தற்போது 240 ரூபாவாக உயர்ந்துள்ளது.

அது மட்டுமல்ல உலக சந்தையில் எரிபொருளுக்கான விலை குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அன்று 2 ஆயிரத்து 300 ரூபாவாக இருந்த எரிவாயு எங்களுடைய ஆட்சியில் ஆயிரத்து 350 ஆக குறைக்கப்பட்டது. இப்போது 1650 ரூபா. ஆனால் இப்போது எங்கள் ஆட்சியிருந்தால் 950 ரூபாவுக்கு வழங்கியிருப்போம்.

அதுமாத்திரமல்ல இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. மிகவும் பின்தங்கிய பொருளாதாரம் இந்த அரசாங்கம் தந்திருக்கின்றது. ஒரே ஒரு பரிசாக கொரோனா இதற்கு ஒரு தீர்வு இல்லை என அவர் குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

# பாவற்குளம் காட்டில் மிதிவெடி



(நெளுக்குளம்)

வவுனியா பாவற்குளத்தினை அண்டிய காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஒருவர் மாடு மேய்க்கச் சென்ற வேளையில் காட்டுப்பகுதியில் மிதிவெடியினை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து உலுக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மிதிவெடியினை பார்வையிட்டதுடன் நேற்று நீதிமன்றில் அனுமதி பெற்று வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டு செயலிழக்கச் செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-5-299)

# விபத்தில் பெண் ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்ற பெண் ஊடகவியலாளர் ஒருவர் விபத்தில் காயமடைந்துள்ளார்.


நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் குடிமனைக்குள் புலி வந்து போவதால் மக்கள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற பெண் ஊடகவியலாளர் ஒருவர் ஓமந்தை இலங்கை வங்கி முன்பாக விபத்துக்குள்ளாகி காயமடைந்துள்ளார்.

வீதியின் குறுக்காகச் சென்ற மாட்டினை விலத்திச் செல்ல முற்பட்ட போது நாய் ஒன்றுடன் மோதியதால் விபத்து ஏற்பட்டது. குறித்த விபத்தில் நாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

இவ்விபத்தில் ஊடகவியலாளர் காயமடைந்ததுடன் அவரது மோட்டார் சைக்கிளும் சேதங்களுக்குள்ளானது.(4-5-250)

# சுவரொட்டிகள் அகற்றப்பட்டன



(குப்பிழான்)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் குப்பிழான், ஏழாலை, மயிலங்காடு, சூராவத்தை உள்ளிட்ட பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த சட்டவிரோத தேர்தல் சுவரொட்டிகள் சுன்னாகம் பொலிஸாரால் அகற்றப்பட்டு வருகின்றன.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் பல்வேறு கட்சி வேட்பாளர்களின் சுவரொட்டிகள் இவ்வாறு அகற்றப்பட்டு வருகின்றன. (5-18)

# ஏலவிற்பனை பிற்போடப்பட்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட/நீதவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 18.07.2020 ஆம் திகதியன்று நடைபெறவிருந்த பகிரங்க ஏலவிற்பனையானது தற்போது நாட்டிலுள்ள கொவிட்-19 சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பிற்போடப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட/நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)



முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் முகாமையாளராக கடமையாற்றியவர் கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாற்றலாகி சென்றுள்ள ஜேசுதாசன் யூட்பிறிடாவிற்கு அவருக்கான சேவைநலன் பாராட்டு விழாவும் (பிரியா விடை நிகழ்வு) புதிதாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற முகாமையாளர் பா.விக்னேஸ் வரரூபனுக்கு வரவேற்பு நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# முகக்கவசம் அணியாதவர்கள் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை



(முறிகண்டி)

கிளிநொச்சியில் கொரோனாத் தடுப்பு சட்டத்தினை கடுமையாக நடைமுறைப்படுத்தும் பொலிஸாருக்கு புத்திஜீவிகள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் நேற்றுக் காலை முதல் முகக்கவசம் அணியாது செல்பவர்கள் தொடர்பில் பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். முகக்கவசம் அணியாது வீதிகளில் பயணிப்பவர்களின் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளைப் பார்வையிட்டு பதிவுகளை மேற்கொண்டு வருவதுடன், முக கவசம் அணிவது தொடர்பில் கடும் எச்சரிக்கைகளையும் விடுத்து வருகின்றனர்.

அரசின் கொரோனாத் தடுப்புச் சட்டத்தினை மக்கள் கடைப்பிடிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொலிஸாரை புத்திஜீவிகள் பாராட்டுகின்றனர்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் சமூகத் தொற்று ஏற்படாத சூழலில் மக்கள் கொரோனாத் தடுப்பு சட்ட நடைமுறைகளைக் கடைப்பிடிக்காத வகையில் நடமாட்டங்களை மேற்கொண்டனர்.

தற்போது கொரோனாவின் தாக்கம் நாட்டை அச்சுறுத்தும் நிலை காணப்படும் நிலையிலும் மக்கள் முகக்கவசம் அணிவதில் அக்கறை செலுத்தாது செயற்பட்டு வருகின்றனர்.

குறித்த நடைமுறை பின்பற்றாத நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-5-100)

# வவுனியாவில் 20 தேர்தல் முறைப்பாடுகள்

## அரச அதிபர் தகவல்



(நெளுக்குளம்)

பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இது வரை இருபது முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார்.


தேர்தல் முறைப்பாடுகள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் தொடர்பில் இதுவரை குறைவான முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன. அந்த வகையில் கடந்த மாதம் 9 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் மாலைவரை 20 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் தபால் மூலமான வாக்களிப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 5,132 தபால் வாக்காளர்களின் விண்ணப்பங்களும் மன்னார் மாவட்டத்தில் 4,196 விண்ணப்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,381 விண்ணப்பங்களுமாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் 12,709 தபால் மூலமான வாக்குகளிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)



முல்லைத்தீவு கிளிநொச்சிக்கான பிரதான பாலம் பழைய பாலத்திற்கு அருகில் புதிதாக அமைக்கப்படுகிறது. (படம்:- தருமபுரம் செய்தியாளர்)

# நிறுவனங்களில் சுகாதார அறிவுரைகளை பின்பற்றுவது பிரதானிகளின் பொறுப்பாகும்

## ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

**கொவிட் - 19 தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள தற்போதைய சூழ்நிலையில் வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது நிறுவன பிரதானிகளின் பொறுப்பாகுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



கொவிட் ஒழிப்பு செயலணியுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட் 19 தொற்றை முழுமையாகக் கட்டுப்படுத்தும் வரை சமூக ரீதியாக வைரஸ் பரவுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. கந்தகாடு புனர்வாழ்வு நிலையம் அதற்கு ஒரு உதாரணமாகும். அதனால் சமுதாய ரீதியாக இலகுவாக செய்யக்கூடிய பரிசோதனைகளை தொடர்ந்து செய்ய வேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடு சுமுகமான நிலையை அடைந்திருந்தாலும் நோய்த் தொற்று பரவும் அபாயம் காணப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கைகளை கைவிடக்கூடாது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் உடல் வெப்ப நிலையை பரிசோதித்தல் போன்ற இலகுவான பரிசோதனைகளை தினமும் முன்னெடுப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

முகக்கவசம் அணிதல், கை கழுவுதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் எந்த நேரமும் பின்பற்றப்பட வேண்டியவைகளாகும்.

காய்ச்சல், தொண்டைவலி போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் அதுபற்றி புரிந்துகொண்டு சமூகத்தில் சேர்ந்து வாழாது தனித்திருந்து நோய்த் தொற்று ஒழிப்புக்கு பங்களிக்க முடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, பிரதமரின் செயலாளர் காமினி செனரத் ஆகியோருடன் கொவிட் ஒழிப்பு செயலணியின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். (ஜ-4)

# கட்டுநாயக்க விமான நிலையம் கிருமித் தொற்று நீக்கம்



(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கிருமித் தொற்று நீக்கப் பணிகள் இடம்பெற்றன.

இராணுவத்தினரால் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு அமைவாக பயணிகள் உள்வரும் மற்றும் வெளியேறும் பகுதிகள், சுங்கத் தீர்வை அற்ற கட்டட பகுதி மற்றும் விமானம் தரையிறங்கும் பகுதி ஆகியன இவ்வாறு கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டது. (ஜ-4)

# பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து நாளை தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை கொரோனாத் தொற்று ஒழிப்பு தொடர்பான செயலணியுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகள் மீளத் திறக்கப்படாவிடில் வீடுகளில் இருந்து மாணவர்களுக்கு பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கு புதிய ஆலோசனை அறிக்கை ஒன்றை விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் சந்திரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றிற்கான திகதிகள் அறிவிக்கப்படுமெனவும் நாட்டில் தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டு பரீட்சை திகதி குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் பாடசாலைகளை மீளத் திறப்பதில் தாமதம் ஏற்பட்டால் உயர்தர மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான திகதிகளும் தாமதமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பிரேசிலில் உயரும் கொரோனாத் தொற்றாளர்கள்

(றியோடி ஜெனிரே)

பிரேசிலில் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் அங்கு 43 ஆயிரத்து 245 கொரோனாத் தொற்றாளர்கள் பாதிவாகியுள்ளனர்.

அத்துடன், அங்கு நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 341 பேர் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அங்கு 12 இலட்சத்து 13 ஆயிரத்து 512 பேர் கொரோனா விலிருந்து முழுமையாக மீண்டுள்ளனர்.

பிரேசிலில் இதுவரையில் 19 இலட்சத்து 31 ஆயிரத்து 204 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 74 ஆயிரத்து 262 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# நாட்டு மக்களை வறுமையை நோக்கித்தள்ளும் அரசாங்கம்

## சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு பதிலாக அவர்களை வறுமையை நோக்கித் தள்ள முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

ரம்புக்கன பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்துள்ள அவர், பொதுத் தேர்தலுக்கு பின்னர் மக்களுக்கான அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் செய்ததைப் போலவே மக்களை ஏமாற்ற இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது என குறிப்பிட்ட அவர் அவர்களின் நடவடிக்கைகள் பொதுமக்களை வறுமைக்கு தள்ளுவதாகும் என்றும் தெரிவித்தார்.



மக்களின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு பலம்மிக்க அரசாங்கத்தை அமைக்கும் என்றும் கிராமங்களையும் நகரங்களையும் கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

06

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சி.கதிரவேலுப்பிள்ளை 1981 மார்ச் 31 இல் இறக்கவே, அவருக்குப் பதிலாக எம். ஆலாலசுந்தரம் 1981 ஜூலை 23 இல் நியமிக்கப்பட்டார். எம். ஆலாலசுந்தரம் 1985 செப்டம்பர் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

தேசிய அரசுப் பேரவை (பாராளுமன்றத்)தேர்தல் முடிவுகள்–1977
வட மாகாணம் - அட்டவணை- 11

| தேர்தல் தொகுதி | வெற்றிபெற்றவர் | பெற்ற வாக்குகள் | கட்சி | A | B |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | கா. பொ. இரத்தினம் | 17,640 | த.வி.கூ | 36,372 | 6 |
| வட்டுக்கோட்டை | ரி.திருநாவுக்கரசு | 23,384 | த.வி.கூ | 40,684 | 7 |
| காங்கேசன்துறை | அ.அமிர்தலிங்கம் | 31,155 | த.வி.கூ | 43,907 | 2 |
| யாழ்ப்பாணம் | வெ. யோகேஸ்வரன் | 16,251 | த.வி.கூ | 34,865 | 6 |
| கோப்பாய் | சி. கதிரவேலுப்பிள்ளை | 25,840 | த.வி.கூ | 41,824 | 4 |
| பருத்தித்துறை | க. துரைரத்தினம் | 12,989 | த.வி.கூ | 28,447 | 5 |
| சாவகச்சேரி | வீ. என். நவரத்தினம் | 20,028 | த.வி.கூ | 36,959 | 5 |
| மானிப்பாய் | வி. தர்மலிங்கம் | 27,550 | த.வி.கூ | 41,373 | 4 |
| நல்லூர் | மு. சிவசிதம்பரம் | 29,858 | த.வி.கூ | 40,205 | 5 |
| உடுப்பிட்டி | ரி. இராஜலிங்கம் | 18,768 | த.வி.கூ | 36,955 | 9 |
| கிளிநொச்சி | வீரசிங்கம் ஆனந்தசங்கரி | 15,607 | த.வி.கூ | 28,670 | 5 |
| மன்னார் | பி.சூசை சூசைதாசன். | 15,141 | த.வி.கூ | 31,767 | 5 |
| வவுனியா | தா. சிவசிதம்பரம் | 13,821 | த.வி.கூ | 28,450 | 3 |
| முல்லைத்தீவு | எக்ஸ். எம். செல்லத்தம்பு | 10,261 | த.வி.கூ | 24,698 | 4 |

த.வி.கூ- தமிழர் விடுதலைக் கூட்டணி = தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி
A- பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, B- வேட்பாளர் எண்ணிக்கை

### சில தேர்தல்களில் தோல்வியடைந்த முக்கிய தமிழ் அரசியல்வாதிகள்

பிரபல்யம் பெற்ற சில தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் வெறுப்பால் தேர்தல்களில் தோல்வியடைந்தார்கள். சிலர் கட்சி மாறியதால் தோல்வியடைந்தார்கள். சிலர் தேர்தலில் போட்டியிட கட்சி இடம் கொடுக்காததால் சுயேட்சையாக போட்டியிட்டு தோல்வி யடைந்தார்கள். அவர்களின் விபரம் அட்டவணை-12 ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை-12 - தோல்வியடைந்த முக்கிய தமிழ் அரசியல்வாதிகள் (1921-1977)

| பெயர் | தேர்தலில் வெற்றி | தேர்தலில் தோல்வி | தேர்தலில் தோல்வி அடைந்த ஆண்டுகள் | தேர்தலில் தோல்வி அடைந்த தொகுதி |
|---|---|---|---|---|
| எஸ்.ஜே.வி.செல்வநாயகம் | 7 | 1 | 1952 | KKS |
| ஜி.ஜி. பொன்னம்பலம் | 6 | 4 | 1931, 1960,1960,1970, | MM, JF |
| அ.அமிர்தலிங்கம் | 5 | 2 | 1952,1970 | VA |
| மு. சிவசிதம்பரம் | 4 | 2 | 1956, 1970 | PP,UD |
| தா. சிவசிதம்பரம் | 4 | | 1970 | VU |
| வீரசிங்கம் ஆனந்தசங்கரி | 2 | 3 | 1960M,1960J,1965 | KL |
| சி. சுந்தரலிங்கம் | 3 | 2 | 1960M, 1965 | VU |
| Dr இ.மு.வி. நாகநாதன் | 3 | 3 | 1952,1956,1970 | JF,NA |
| வி. நவரத்தினம் | 2 | 3 | 1952.1970.1977 | KY |
| அருணாசலம் மகாதேவா | 2 | 1 | 1947 | JF |
| சுப்பையா நடேசன் | 3 | 2 | 1947,1956 | KKS |
| வி. குமாரசாமி | 2 | 5 | 1956,1960M,1965,1970,1977 | CV,KL |
| அ.த.துரையப்பா | 2 | 2 | 1965,1970 | JF |

KKS- காங்கேசன்துறை, CV- சாவகச்சேரி, KI- கிளிநொச்சி, JF- யாழ்ப்பாணம், MM- மன்னார்-முல்லைத்தீவு, VA- வட்டுக்கோட்டை, KY- ஊர்காவற்றுறை, NA – நல்லூர், PP- பருத்தித்துறை, UD- உடுப்பிட்டி, VU- வவுனியா,

### புதிய தேர்தல் மாவட்டங்கள்

இலங்கையில், 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம், விகிதாசாரத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னிருந்த தேர்தல் முறையின் கீழ் நாட்டிலிருந்த நிர்வாக மாவட்டங்கள் ஒவ்வொன்றும் பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார். 1978 இல் இம்முறை ஒழிக்கப்பட்டது. விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் பல தேர்தல் தொகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டுத் தேர்தல் மாவட் டங்கள் உருவாக்கப்பட்டன. பெரும்பாலும், ஒவ்வொரு நிர்வாக மாவட்டமும் ஒரு தேர்தல் மாவட்டமாகவும் அமைந்தது. ஆனால் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய நிர்வாக மாவட்டங்கள் குறைவான மக்கள் தொகையைக் கொண்டிருந்தால், இம் மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியை மட்டுமே கொண்டிருந்தன. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் பல உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு மக்கள் தொகை போதுமானதாக இல்லாதிருந்ததால், அருகருகேயிருந்த இம்மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி வன்னித் தேர்தல் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

வடமாகாணத்தேர்தல்களில் வெற்றிபெற்ற கட்சிகள் (1934-1977)

| தொகுதி / தேர்தல் ஆண்டு | 1934 | 1936 | 1947 | 1952 | 1956 | 1960M | 1960J | 1965 | 1970 | 1977 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாவகச்சேரி | | | TC | TC | FP | FP | FP | FP | FP | TU |
| யாழ்ப்பாணம் | IN | IN | TC | TC | TC | IN | IN | TC | FP | TU |
| காங்கேசன்துறை | IN | IN | TC | UNP | FP | FP | FP | FP | FP | TU |
| ஊர்காவற்றுறை | IN | IN | IN | TC | FP | FP | FP | FP | FP | TU. |
| கிளிநொச்சி | | | | | | FP | FP | FP | TC | TU |
| கோப்பாய் | | | TC | FP | FP | FP | FP | FP | FP | TU |
| மானிப்பாய் (உடுவில்) | | | | | | FP | FP | FP | FP | TU |
| நல்லூர் | | | | | | FP | FP | FP | TC | TU |
| பருத்தித்துறை | IN | IN | TC | TC | CP | FP | FP | FP | FP | TU |
| உடுப்பிட்டி | | | | | | TC | TC | TC | FP | TU |
| வட்டுக்கோட்டை | | | TC | IN | FP | FP | FP | FP | TC | TU |
| வவுனியா | | | IN | IN | IN | IN | IN | TC | FP | TU |
| முல்லைத்தீவு | | | | | | | | | | TU |
| மன்னார் | | | IN | IN | FP | FP | FP | FP | FP | TU |
| மன்னார்-முல்லைத்தீவு | IN | IN | | | | | | | | |

TC- தமிழ் காங்கிரஸ் (1944) FP- தமிழரசுக் கட்சி (1949),
CP- கம்யூனிஸ்ட் கட்சி(1940) TU=TULF= தமிழர் விடுதலைக் கூட்டணி (1972)

இலங்கை பாராளுமன்றத்திற்காக 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. இதில் 196 பிரதிநிதிகளை வாக்காளர்கள் நேரடியாக தேர்ந்தெடுப்பார்கள். 29 பிரதிநிதிகள் தேசியப்பட்டியல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வட மாகாணம் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டம் என இரு தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது.

98ஆவது சரத்தின் முதலாம் பிரிவு பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் எனவும், இவர்களுள் 196 உறுப்பினர்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்படுவர் எனவும், இவர்களுள் 36 உறுப்பினர்கள் ஒரு மாகாணத்துக்கு நான்கு பேர் என்ற அடிப்படையில் 9 மாகாணங்களுக்கும் பிரித்தளிக்கப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் குறைந்தது ஒரு உறுப்பினரையாவது பெற்றுக் கொள்ளும் வகையில் இது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதனை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்குமான எண்ணிக்கை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது. கொழும்பு-2, கம்பஹா-1, களுத்துறை-1, கண்டி-1, மாத்தளை-1, நுவரெலியா- 2, காலி- 1, மாத்தறை- 1, அம்பாந்தோட்டை- 2, யாழ்ப்பாணம்-1, வன்னி - 3, மட்டக்களப்பு- 1, அம்பாறை- 2, திருகோணமலை- 1, குருநாகல்- 2, புத்தளம்- 2, அநுராதபுரம்- 2, பொலன்னறுவை- 2, பதுளை-2, மொனறாகலை-2, இரத்தினபுரி-2, கேகாலை-2, மொத்தம் 36.

எஞ்சிய 160 உறுப்பினர்களும் மாவட்டங்களில் வாக்காளர்களது விகிதாசாரத்துக்கேற்ப மாவட்டங்களுக்கு பிரித்தளிக்கப்படும். இதற்காக முழு இலங்கையினது மொத்த வாக்காளர் தொகையை 160 இனால் பிரிப்பதன் ஊடாக தேசிய கோட்டாத் தொகை அல்லது தகைமை பெறு தொகை பெற்றுக்கொள்ளப்படும். அத்தொகையினால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் மொத்த வாக்காளர் தொகையை வகுப்பதன் ஊடாக மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு செய்யப்படும். வருடாந்தம் வாக்காளர் தொகை கணிப்பீடு செய்யப்படுவதால், ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய ஆசன ஒதுக்கீடு வருடாந்தம் தேர்தல் ஆணையாளரால் கணிப்பிடப்படுகிறது.

இவ்வெண்ணிக்கையோடு மாகாணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 04 ஆசனங்களில் மாவட்டத்துக்குரிய ஆசனத்தையும் சேர்க்கும்போது கிடைக்கப்பெறுகின்ற ஆசனங்களின் எண்ணிக்கையே அம்மாவட்டத்துக்குரிய மொத்த ஆசனத்தொகையாகும். மீதமாக உள்ள 29 உறுப்பினர்கள் தேசியப்பட்டியல் ஊடாக நிரப்பீடு செய்யப்படுவர்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல் -1989

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டவிதிகளின் பிரகாரம், 1983 ஆம் ஆண்டில் நடத்தப்பட வேண்டிய தேர்தல் 1982 தேசிய வாக்கெடுப்பு மூலம் இரத்துச் செய்யப்பட்டது. இலங்கையின் 9வது பாராளுமன்றத் தேர்தல் 1989 பெப்ரவரி 15 இல் நடைபெற்றது. விகிதாசார முறைப்படி நடந்த முதலாவது தேர்தல் ஆகும். இத் தேர்தலில் வட மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை 16. அதாவது யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்-11 மற்றும் வன்னி தேர்தல் மாவட்டம்-5 ஆகும்.

### யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் - 1989

இத்தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழ் குழுவான ஈழம் புரட்சிகர மாணவர் அமைப்பு (ஈரோஸ்) சுயாதீன குழுவாக போட்டியிட்டு 8 இடங்களை வென்றது.

(தொடரும்....)

# நான் வென்றால் கோட்டாபய வென்றதற்கு சமன் அல்ல தமிழ் மக்கள் வென்றதற்கே சமன்- அங்கஜன் பதிலடி



(கொழும்பு)

நான் வென்றால் கோட்டா பய வென்றதற்கு சமன் அல்ல. தமிழ் மக்கள் வென்றதற்கே சமன் என அங்கஜன் இராம நாதன் தெரிவித்தார்.

அங்கஜன் வென்றால் ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ வென்றதற்கு சமன் என தமி ழரசு கட்சியின் வேட்பாளர் தர்ம லிங்கம் சித்தார்த்தன் கூறிய கருத்திற்கு பதில் வழங்கும் வகையில் மண்டைதீவு பகுதி யில் இடம்பெற்ற மக்கள் சந்திப் பின் போது அங்கஜன் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

நான் ஒரு விடயத்தை ஆணித்தரமாக கூறிக்கொள் கிறேன்.

நான் வென்றால் மக்கள் வென்றதற்கு சமன்; அங்கஜன் இராமநாதன் வென்றால் தர்மம் வென்றதற்கு சமன்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வென்றால் மக்கள் தோற்றதற்கு சமன். மக்கள் ஏமாறியதற்கு சமனாகும்.

25 வருடங்கள் ஏமாற் றியது போதாதென்று இன்னும் ஏமாற்றும் தந்திரத்தை ஆர ம்பித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று மேலும் தெரிவித்தார். (2-4)

# இளைஞர் சமுதாயத்திற்கு வழிவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்குவேன்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(கொழும்பு)

நான் இன்னும் ஐந்து வருட ங்களில் அரசியலில் இருந்து ஒதுங்கி இளைஞர் சமுதாயத் திற்கு வழிவிடுவேன் என கடற் றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரும், ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளரு மாகிய டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை சாவ கச்சேரி ஜங்கரன் மணி மண் டபத்தில் இடம்பெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென் மராட் சித் தொகுதி இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நான் இன்னும் 5 வருடங் கள் தான் அரசியலில் இருப் பேன் என நினைக்கிறேன். வயது போன பின் அரசியலை நான் நடத்த மாட்டேன். 5வருடத்தின் பின் அரசியலுக்குள் வரவிருக் கும் இளைஞர் சமுதாயத்திற்கு வழிவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வேன். தேவை ஏற்படின் ஓர் ஆலோசகராக மாத்திரம் செயற்படுவேன்.

வயதுபோன பின் அரசியல் நடத்த எனக்கு விருப்பமும் இல்லை. அதற்கான தேவை யும் இல்லை. இன்றைய இளை ஞர்களை தலைமை தாங்குப வர்களாக வளர்த்தெடுக்கவே விரும்புகிறேன்.

நான் ஆட்சியில் பங்கெடுப் பதும், அமைச்சுப்பதவி எடுப்பதும் எங்கள் மக்களுக்காகவே. எனக்கு கிடைப்பது எங்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (2-30)

# மண்மேடு சரிந்ததில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மெணிக்ஹின்ன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜினதாச மாவத் தையில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல், குறித்த பகுதியில் மண் அகற்றும் பணியில் இருவர் ஈடுபட்டிருந்தபோது, திடீரென மண்மேடு சரிந்து அவர்கள் மீது வீழ்ந்துள்ளது.

இதில் காயமடைந்த இருவரும், மெணிக்ஹின்ன வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து ஒருவர் உயிரி ழந்துள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மெணிக்ஹின்ன, உடகம்மெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மெணிக்ஹின்ன பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# தேர்தல் சட்டமீறல் தொடர்பில் 3040 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறி யமை தொடர்பில் இதுவரை யில் மூவாயிரத்திற்கும் மேற் பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

அதன் அடிப்படையில் இது வரையில் 3040 முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறை தேர்தல் சட்டங் களை மீறல் போன்ற பல்வேறு முறைப்பாடுகளே இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளன. (ஜ-4)

# கொரோனா நோயாளிகளை தேடி வலைவீச்சு

(கந்தகாடு)

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று 532 பேருக்கு உறுதிப்படுத்தப்பட் ள்ளதாக சுகாதாரப் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித் துள்ளார். இலங்கையில் நேற்று முன்தினம் மாத்திரம் கொரோ னாத் தொற்றுக்குள்ளான 19 பேர் அடையாளம் காணப் பட்டு ள்ளனர். நேற்று முன்தினம் மட் டும் ராஜாங்கன-யாய பிரதேசத் தில் 300 இற்கும் அதிகமானோ ருக்கு பி.சி.ஆர். பரி சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ராஜாங்கன-யாய பிரதே சத்தில் தொடர்ந்து பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

ராஜாங்கன-யாய கொரோ னாத் தொற்றுடன் தொடர்புடை யவர்களை தேடி நாடு முழு வதும் பல பகுதிகளில் பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள் ளப்படுகின்றன.

இலங்கையில் கொரோ னாத் தொற்றியவர் தொடர்பில் சரியான தகவல்கள் சுகாதார பிரிவினால் அறிவிக்கப்படும். போலியான தகவல்களை நம்ப வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# தனிமைப்படுத்தலிலிருந்து 365 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 365 பேர் நேற்று வீடுக ளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட னர்.

நாடளாவிய ரீதியிலுள்ள 58 தனிமைப்படுத்தல் நிலை யங்களில் 7 ஆயிரத்து 119 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் 2 ஆயிரத்து 665 பேர் இதுவரையில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்பது குறிப்பிடத்தக் கது. (ஜ-8)

# இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் விக்னேஸ் உறுதி



(யாழ்ப்பாணம்)

கடந்த நல்லாட்சி அரசாங் கத்தின் காலப்பகுதியிலே வட க்கு மண்ணில் மிக மோசா மான அளவில் அபிவிருத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அபிவி ருத்தி என்று சொல்லக்கூடிய எவ்வித ஆக்கபூர்வமான செயற் பாடுகளும் முன்னெடுக்கப்பட வில்லை என ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் குலரட்ணம் விக் னேஷ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரி விக்கும் போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், தமிழர் பிரதேசத்திலே காத்திரமான அபிவிருத்தி ஒன் றினை ஏற்படுத்துவதனூடாக தமிழர் பிரதேசத்திலுள்ள அநே கமான பிரச்சினைகளை குறிப் பாக வேலையில்லாப் பிரச் சினை, சமூக குற்றச் செயல் கள், பொருளாதாரப் பிரச்சினை கள் அத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை வென்றெ டுக்க முடியும். வட பகுதிக்கான பொருளாதாரக் கொள்கை யொன்று வகுக்கப்படல் வேண் டும்.

இது தேசிய பொருளாதாரக் கொள்கைக்கு வலுச் சேர்ப் பதாகவும் இருத்தல் வேண்டும் யாழ், கிளிநொச்சி பிரதேசங் களில் சுமார் 400 தொழிற் துறைகளை ஆரம்பித்து அப் பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தாகவும் அவர் தெரிவித் தார். (ஜ-8)

# தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தாதீர்கள்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்களைப் பயன்படுத்து வதைத் தவிர்க்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறி வித்துள்ளது.

சில வேட்பாளர்கள் தமது பிரசாரங்களுக்காக காணொ ளிகள், விளம்பரங்கள், சுவ ரொட்டிகளில் சிறுவர்களைப் பயன்படுத்தியுள்ளமை தொடர் பில் கண்காணிப்பு அமைப்பு களினால் தமக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக தேசிய தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இதனால் சிறுவர்களின் ஆளுமை வளர்ச்சி, மன நிலை, அடையாளம் மற்றும் அவர்களின் எதிர்காலம் என் பன மோசமாகப் பாதிக்கப்ப டலாமென ஆணைக்குழு சுட் டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்த க்கது. (ஜ-8)

# பாரதம்

# ஃபிங்கர் பகுதியில் இருந்து சீனா வெளியேற வேண்டும்

## இந்தியா வலியுறுத்து

(டில்லி)

சீனப்படைகளை ஃபிங்கர் பகுதியில் இருந்து வெளியேறுமாறு இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்திய - சீன இராணுவ உயர் அதிகாரிகளுக்கு இடையிலான நான்காம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை கடந்த திங்கட்கிழமை சூசல் எல்லைப் பகுதியில் நடைபெற்றது.

இதன்போதே, சீனப்படைகளை ஃபிங்கர் பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



8 மலைச்சிகரங்கள் கொண்ட ஃபிங்கர் பகுதியில் படைகளைக் குறைப்பதுதான் இந்திய- சீனா இடையே மிகவும் சிக்கலான பிரச்சினையாக உள்ளது.

கடந்த முறை நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் படைகள் விலக்கிக்கொள்ளப்பட்டமையைக் குறித்தும் இராணுவ உயர் அதிகாரிகள் இதன்போது ஆய்வு செய்தனர்.

ஆயுதங்கள், படைகளை படிப்படியாக எல்லையில் இருந்து விலக்குவது குறித்தும் இரு நாட்டு இராணுவ உயர் அதிகாரிகளும் இதன்போது ஆராய்ந்தனர்.

எல்லையில் பதற்றத்தைக் குறைக்க வேண்டும் என்று இரு நாட்டு இராணுவத்தினரும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அதற்கான சூழலை உருவாக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

முற்பகல் 11.30 மணிக்கு தொடங்கிய இந்தப் பேச்சுவார்த்தை நள்ளிரவு 12 மணி வரை நீடித்தது. மிகவும் சிக்கலான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டதால் நேரம் நீடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# சீனாவுடனான பதற்றம் நீடிக்கும் நிலையில் சுரங்கப்பாதை அமைக்க இந்தியா திட்டம்

(டில்லி)

சீனாவுடன் பதற்றம் நிலவும் நிலையில் அந்நாட்டு எல்லை அருகே பிரம்மபுத்திரா நதியின் கீழ் சுமார் 14 கிலோ மீற்றர் நீளத்துக்கு சுரங்கப்பாதை அமைக்க மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.



அசாமின் கோபூர் மற்றும் நுமாலிகார் நகரங்களை இணைக்கும் வகையில் நான்கு வழி சுரங்கம் அமைக்க மார்ச்சில் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதாகவும் இது சீனாவின் தாய்கு நதியின் கீழ் 10 புள்ளி 79 கிலோ மீற்றர் நீளத்துக்கு அமைக்கப்பட்ட சுரங்கப்பாதையை விடவும் நீளமானது.

சுரங்கப் பாதையை 3 கட்டங்களாக நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அதில் வென்டிலேட்டர், நடைபாதை, கழிவு நீர்ப்பாதை அமைப்பு உள்ளிட்டவை அமைக்கப்படவுள்ளது.

டிசெம்பரில் தொடங்கப்படவுள்ள இத்திட்டத்தை செயற்படுத்த அமெரிக்காவின் லூயிஸ் பெர்கர் நிறுவனத்துடன் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் கைகோர்த்துள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (2)

# கமரா வடிவில் வீடு கட்டிய புகைப்படக் கலைஞர்

(பெலகாவி)

பெலகாவியில், தொழில் மீதான பக்தியால் கமரா வடிவில் வீடு கட்டிய புகைப்படக் கலைஞர் தனது மகன்களுக்கும் கமரா நிறுவனங்களின் பெயரை வைத்து அசத்தியுள்ளார்.

பொதுவாக புதிதாக வீடு கட்டுபவர்களுக்கு பல ரசனைகள் மனதில் இருக்கும். தங்களது வீடுகளை அழகான வடிவிலும், பார்ப்பவர்கள் ரசிக்கும் வகையிலும், கலைநயத்துடனும் கட்ட வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் எழுவது உண்டு. கமரா வடிவில் கட்டப்பட்ட இந்த வீட்டின் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. இந்த புகைப்படத்தை பார்த்த பலரும் கமரா வடிவில் வீடு கட்டிய ரவி ஒங்கலேவை வெகுவாகப் பாராட்டி வருகின்றனர். இது குறித்து ரவி ஒங்கலே கூறும்போது, சிறு வயதில் இருந்தே புகைப்படம் எடுத்து வருகிறேன். புகைப்படம் எடுக்கும் தொழில் செய்து தான் தற்போது நான் நல்ல நிலையில் உள்ளேன். தொழில் மீதான பக்தி மற்றும்



என்னை பெரிய ஆளாக்கிய கமராவுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று நினைத்து இருந்தேன். இப்போது எனது எண்ணத்தில் கமரா வடிவில் வீடு கட்ட வேண்டும் என்று தோன்றியது.

என்னை வாழ வைத்த கமராவுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் எனது மகன்கள் 3 பேருக்கும் கமரா நிறுவனங்களின் பெயரான கேனான், நிகான், எப்சான் என பெயர் சூட்டி உள்ளேன் என ரவி ஒங்கலே தெரிவித்தார். (2)

# இந்தோ

# 15 பேர்



(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவின்**
**வெள்ளப்பெருக்கில் சிக்**
**காணாமல்போய் உள்ளதாக**

குறித்த பிரதேசத்தில், கடந்த திங்கள் முதல் பெய்துவரும் பலத்த மழை

கார

பெறு

# குழந்தை

# கொரோனா



(டுபாய்)

சவுதி அரேபியாவில் குழந்தைக்
கொரோனா பரிசோதனை செய்
போது பரிதாபமாக உயிரிழந்த ச
வத்தின் புகைப்படம் வெளியாகி பா
போரை கண்கலங்க வைக்கிறது.

சவுதி அரேபியாவில் அதிக உடல் வெ
நிலை காரணமாக குழந்தை ஒன்
அவரின் பெற்றோர்கள் அங்கிருக்

## வெளிநாடு



# தோனேசியாவில் வெள்ளத்தில் சிக்கி

# ர் உயிரிழப்பு





**ாவின் தெற்கு சுலவேசி மாகாணத்தில் ஏற்றபட்ட திடீர் ல் சிக்கி 15 பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் பலர் ள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

திங் மழை

காரணமாக சடுதியாக மூன்று ஆறுகள் பெறுக்கெடுத்துள்ளன.

இதன் காரணமாக திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளிபெருக்கில் காணமால் போனவர்களைத் தேடும் பணி தொடரும் நிலையில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளப் பெருக்கு மூலம் வீதிகள் மற்றும் ஆயிரக் கணக்கான வீடுகளை ஆக்கிரமித் துள்ளது.

வடக்கு லூவுவில் உள்ள ஆறு துணை மாவட்டங்களில் வசிக்கும் 4,000 இற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வீதிகள் மற்றும் ஆயிரக் கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக இந்தோனேசியாவின் தேசிய பேரிடர் தணிப்பு மையம் தெரிவித்துள்ளது. (2)

# தைக்கு எமனான

# னா பரிசோதனை



குழந்தைக்கு
ன செய்யும்
ிரிழந்த சம்ப
ளியாகி பார்ப்
க்கிறது.
ிக உடல் வெப்ப
ந்தை ஒன்றை
அங்கிருக்கும்

பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அப்போது அங்கிருந்த வைத்தியர்கள் குழந்தைக்கு கொரோனா இருக்கிறதா? என்பதை உறுதி செய்வதற்காக பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும் ஸ்வாப், அதாவது மாதிரிகளை எடுக்க மூக்கினுள் விடப்படும் குச்சியைக் குழந்தையின் மூக்கில் விடும்போது குச்சி உடைந்துள்ளது.

இந்தக் குச்சியை வெளியில் எடுக்க குழந்தைக்கு மயக்க மருந்தை வைத்தியர்கள் கொடுத்துள்ளனர். ஆனால், குழந்தையின் சுவாசக் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக குழந்தை தனது சுயநினைவையும் இழந்துள்ளது. இதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சுமார் 24 மணி நேரத்துக்குப் பிறகு குழந்தை உயிரிழந்தது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (2)

# கட்டடம் இடிந்து விழுந்ததில்

## இடிபாடுகளுக்குள் சிக்கி மூவர் உயிரிழப்பு



(டேராடூன்)

உத்தரகாண்ட் மாநிலத்தில் கட்டடம் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

உத்தரகாண்ட் மாநிலம் டேராடூன் சுக்குவாலா பகுதியில் நேற்று அதிகாலை ஒரு கட்டடம் இடிந்து விழுந்தது. தூங்கிக்கொண்டிருந்த பலர் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்த பேரிடர் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 3 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. சிலர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இடிபாடுகளில் மேலும் சிலர் சிக்கி உள்ளனர். அவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. (2)

# இஸ்ரோ தலைவருக்கு சர்வதேச விருது



(டில்லி)

இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு மைய தலைவராக பணியாற்றி வரும் சிவனுக்கு இந்த ஆண்டிற்கான வோன் கார்மான் விருது வழங்கப்பட உள்ளது.

இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு மைய தலைவராக பணியாற்றி வரும் தமிழகத்தைச் சேர்ந்த சிவன் விண்வெளித் துறையில் உயர்ந்த விருதாக போற்றப்படும் "வோன் கார்மான்" விருதிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டிற்கான இந்த விருதினைப் பெறும் மூன்றாவது இந்தியர் ஆவார். இதற்கு முன் இந்த விருதை பேராசிரியர் உடுப்பி இராமச்சந்திரராவுக்கு 2005 ஆம் ஆண்டிலும் 2007 ஆம் ஆண்டில் டாக்டர் கிருஷ்ணசுவாமி கஸ்தூரி ரங்கனுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# வாக்காளர்களின் உயிரே முக்கியம் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும்

## நவீன் வலியுறுத்து



(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்று பரவலின் இரண்டாவது அலை ஆரம்பமாகியுள்ளதால், தேர்தலைவிட வாக்காளர்களின் உயிர்கள் பெறுமதியானது என்பதால், நிலவும் ஆபத்தை கவனத்தில் கொண்டு பொதுத் தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அந்த கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான நவீன் திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

ஹற்றன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸின் இரண்டாவது அலை பரவுவது தொடர்பாக சுகாதாரத் துறையினரும் அரசாங்கமும் சரியான தகவல்களை நாட்டுக்கு வெளியிடுவதில்லை.

கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை தொடர்பாக வாக்காளர்கள் அச்சம் கொண்டுள்ளனர். இதனால், தேர்தல் உரிய தினத்தில் நடந்தாலும் வாக்களிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை பெரியளவில் குறையக் கூடும்.

அரச ஊழியர்கள் தமது தபால் வாக்குகளை பயன்படுத்தும் போது இரண்டு முறை சிந்திக்க வேண்டும். அரசாங்கம் அரச ஊழியர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளதால், அதன் சாதக நிலைமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு கிடைத்துள்ளது. தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஆளும் கட்சிக்கு ஒரு சட்டமும், எதிர்க்கட்சிக்கு வேறு ஒரு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளமை தொடர்பாக கடும் விசனத்தில் இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த கால தலைவர்கள் தொடர்பாகவும் அவர்கள் நாட்டுக்கு செய்த சேவை குறித்தும் தற்போதைய இளைய தலைமுறையினர் அறியாமல் செயற்படுவதாகவும் நவீன் திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

# பரீட்சைகள் திணைக்களத்தின் ஒருநாள் சேவை இடை நிறுத்தம்

## பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

பரீட்சைகள் திணைக்களத்தின் பொதுச்சேவை துறை மற்றும் ஒருநாள் சேவை என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. சுகாதார காரணங்களிற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இவை மூடப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் திணைக்களத்தில் சான்றிதழ்கள் பெற வேண்டியுள்ளவர்கள் ஒன்லைன் அல்லது மின்னஞ்சல் வழியாக விண்ணப்பித்து 48 மணி நேரத்திற்குள் சான்றிதழ் வீடுகளிற்கு கொண்டு வந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான doenets.lk ஐப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# சாரதி அனுமதிப்பத்திரம் தயாரிக்கும் பணியும் இராணுவத்திடம்-அமரவீர

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரங்களை தயாரிக்கும் பணியை இலங்கை இராணுவத்திடம் அடுத்த வருடம் முதல் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக விசேட கலந்துரையாடல் அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின்போது, சாரதி அனுமதிப்பத்திரத்தை தயாரிக்க ஒவ்வொன்றுக்கும் 1,340 ரூபா செலவாகுவதாகவும், தற்போது வெளிநாட்டு தனியார் நிறுவனமொன்றிடம் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பெருமளவு பணம் வெளிநாடுகளிற்கு செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க இராணுவத்திற்கும் பாதுகாப்பு அமைச்சிற்குமிடையே ஒரு கூட்டுக்குழுவை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# 47 வெளிநாட்டு மாலுமிகள் நாட்டை வந்தடைந்தனர்

47 பேரை உள்ளடக்கிய வெளிநாட்டு மாலுமிகளை கொண்ட இரு குழுக்கள் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளன.

கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பல்களில் திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்காகவே இவர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அதன்படி நேற்று அதிகாலை 1.45 மணியளவில் 42 பேர் டோஹாவிலிருந்து. கட்டார் எயார் வேஸ் விமானத்தில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானத்தில் நாட்டை வந்தடைந்துள்ளனர். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அணுக்கதிர் எழுத்து

சில பேர் கை எழுத்து குண்டு குண்டாக இருக்கும்.சுலபமாக பார்த்துப் படித்து விடலாம்.சில பேர் எழுதும் எழுத்தைப் பார்த்தீர்கள் என்றால் கடுகு அளவிலே இருக்கும்.'லென்ஸ்' வைத்து தான் படிக்கவேண்டும்.எனக்கு ஒருத்தர் கடிதம் அனுப்பி இருந்தார்.நான்கு பக்கத்திலே எழுத வேண்டிய ஒரு சிறு கதையை ஒரு அஞ்சல் அட்டையிலே அடக்கி விட்டார் சேர்!

நான்கு நாள் முயற்சி பண்ணி அதைப் படித்து முடிக்க வேண்டியதாகப் போய் விட்டது.இப்படி பொடி பொடியாக எழுதுகின்றவர்கள் எங்களுடைய ஊரிலே நிறைய பேர் உண்டு.இவர்கள் எல்லாம் அசந்து போகின்ற அளவுக்கு புதிதாக ஒரு எழுத்து முறை கண்டு பிடித்து உள்ளார்கள்.ஒரு குண்டூசி முனையிலே எவ்வளவு வார்த்தை முடியும் என்று நினைக்கின்றீர்கள்.சுமாராக 1500 கோடி வார்த்தைகளை எழுதுகின்றார்களாம் என்கின்றார் மைக் பிரௌன் என்கின்ற ஒரு இங்கிலாந்து விஞ்ஞானி.அவர் சமீபத்திலே ஒரு வாழ்த்து அட்டையாக தயார் பண்ணினாராம்.அதனுடைய அளவு 5 சதுர மைக்ரோ மீற்றராம்.மைக்ரோ மீற்றர் என்றால் எவ்வளவு என்று நினைக்கின்றீர்கள்?

ஒரு மில்லிமீற்றர் எவ்வளவு இருக்கின்றது என்கிறது நமக்குத் தெரியும்.ஒரு மில்லிமீற்றரிலே ஆயிரத்திலே ஒரு பங்கு தான் ஒரு மைக்ரோ மீற்றர்.இது மாதிரி 5 பங்கு நீளம் 5 பங்கு அகலம்.அது தான் அந்த அட்டையின் அளவு .அதை கண்ணால் பார்க்கின்றது கஷ்டம்.அந்த அட்டையிலே எழுதப்பட்ட எழுத்தினுடைய அளவு என்ன அளவு தெரியுமா? 4 சதுர நனோ மீற்றர்.அது என்ன நனோ மீற்றர்.ஒரு மைக்ரோ மீற்றரிலே ஆயிரத்திலே ஒரு பங்கு அதாவது ஒரு மில்லிமீற்றர் 10 இலட்சத்திலே ஒரு பங்கு.

அது சரி இந்த அளவிலே ஒரு எழுத்தை எப்படி எழுதுகின்றார்கள்! அணுக்கதிரைப் பயன்படுத்தி இதை எழுதுகின்றார்கள்.அத்னாலே இதற்குப் பெயரே Atomic scale Writing அணுக்கதிர் அளவு எழுத்து முறை.சரி எழுதுவது தான் எழுதுகின்றார்கள்.அதைப் படிக்கின்றது எப்படி?

எலெக்ட்ரான் மைக்ரோஸ்கோப் மூலமாகத்தான் படிக்க வேண்டும்.1970 இலே Scanning Electron Microscope கண்டு பிடித்தார்கள்.அதுக்குப் பிறகு 1975 இலேHolographic Electron Microscope கண்டு பிடித்தார்கள்.(இது அடுக்கு மைக்ராஸ் கோப்)

இது மூலமாக 20 நனோ மீற்றர் கனமுள்ள எழுத்துக்களைப் பார்க்க முடியும்.இதை விட சின்ன அளவு எழுத்துக்களைப் பார்க்கக் கூடிய மைக்ரோஸ்கோப்பை இப்போது கண்டுபிடித்து விட்டார்கள். ஜப்பானிய விஞ்ஞானி (ஹாட்சுசிரோ ஹாசிமோடோ) இதை முதலிலே வடிவமைத்தார்.

அணுத்துகள்களைக் கூட இது வழியாகத் தெளிவாகப் பார்க்க முடிகின்றதாம். இந்த மைக்ரோஸ்கோப்பைக் கண்டு பிடித்ததுக்குப் பிறகு தான் 4 சதுர நனோ மீற்றர் அளவுள்ள எழுத்துக்களைப் எழுதுகிற அணுக்கதிர் எழுத்து முறையை "மைக் பிரௌன்" உருவாக்கியிருக்கிறார்.

இந்த எழுத்துக்களைப் படிக்கக் கூடிய இந்த நவீன மைக்ரோஸ்கோப் இன்றைக்கு உலகத்திலேயே 5 தான் இருக்கின்றதாம்.

இதை இப்போ...."மைக்ரோ லித்தோகிராப் தொழில் நுட்பம்" அப்படி என்று சொல்லுகின்றார்கள்.இந்த முறையை இன்னும் கொஞ்சம் எளிமைப்படுத்தி விட்டார்கள்.இந்த உலகத்திலே இருக்கின்ற எல்லாப்புத்தகங்களையும் ஒரு சில சதுர மீற்றர் பரப்புக்குள்ளே அடக்கி விடலாம் என்கிறார்கள்.இந்தப் புதிய தொழில் நுட்பம் கல்வித் துறையிலே ஒரு பெரிய புரட்சியையே உண்டு பண்ணி விடும் போல இருக்கின்றது.ஏற்கனவே எங்களுடைய ஊரிலே அரிசியிலே திருக்குறள் எழுதுகின்றது, படம் போடுகின்றது, முட்டை ஓட்டுக்குள்ளே ஓவியம் தீட்டுகின்றது மாதிரி பழக்கம் எல்லாம் உண்டு. ஐரோப்பாவிலே 17 ஆம் நூற்றாண்டிலேயே ஒரு நாணயத்தின் சிறு பகுதிக்குள்ளேயே பிரார்த்தனை வாசகம் பத்துக் கட்டளைகள் எல்லாம் எழுதியிருக்கின்றார்களாம்.இந்த பிரார்த்தனை வாசகங்களை லாரியால்டைஸ் என்கிறவர் 1 சதுர மீற்றர் பரப்பிலே எழுதி கின்னஸ் சாதனை செய்திருக்கின்றார்.

அதெல்லாம் Miniature Writing ஆனால் இப்போது நாங்கள் பேசிக் கொண்டது Atomic Scale Writing அணுக்கதிர் எழுத்து முறை!

நம்முடைய ஆள் ஒருத்தர் ....எப்பவும் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை தான் படிப்பார்.எந்த புத்தகமாக இருந்தாலும் எழுத்துத் தரத்தைப் பார்த்து வாங்கிறதில்லை.

எழுத்து அளவைப் பார்த்துத் தான் வாங்குவார்.

அவர்களிடம் அரிசியிலே திருக்குறளை எழுதிக்கொண்டு வந்த ஒருத்தர் அவர் முன்னாடி மேசையிலே அதை வைத்து இந்த அரிசியிலே என்ன திருக்குறள் எழுதியிருக்கின்றது என்று கண்டுபிடிக்க முடியுமா? என்று சவால் விட்டார். அவர் உடனே ஒரு பெரிய லென்சை கையிலே எடுத்துக் கொண்டார்.அதைக் கண்ணுக்கு அருகே வைத்துக் கொண்டு குனிந்து அவர் கவனித்தார். சிறிது நேரம் ஆகி விட்டது.

என்ன சேர்....குறள் என்ன என்கிறது இன்னும் கண்ணுக்குப் புரியவில்லையோ? என்றார் இவர்.

நான் குறளைக் தேடவில்லை சேர் .அரிசி எங்கே என்று தேடிக்கொண்டு இருக்கின்றேன் என்றார்.

# அற்புதமான ஆடிப்பிறப்பு


"ஆடிப்பிறப்புக்கு நாளை
விடுதலை
ஆனந்தம் ஆனந்தம்
தோழர்களே
கூடிப்பனங்கட்டிக் கூழும்
குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே"

தங்கத் தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் இப் பாடலை நினைக்காத ஆடிப்பிறப்பே இல்லை எனலாம்.

ஜோதிட சாஸ்திரத்தில் ஆடி மாதத்தை "கர்கடக மாதம்" என்பார்கள். சூரியன் குருவின் நட்சத்திரமான புனர்பூசம் நான்காம் பாதத்தில் நுழையும் நேரத்தில் கடக இராசியில் சூரியன் செல்வதே ஆடி மாத பிரவேசம். அந்தந்த கால, பருவ சூழ்நிலைக்கு ஏற்ப திருவிழாக்களையும் உற்சவங்களையும் விரத வழிபாடுகளையும் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

ஆடி மாதத்தில் இருந்து தான் விரதங்கள், பண்டிகைகள், உற்சவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக தொடங்குகின்றன. இந்த மாதத்தை அம்மன் மாதம் என்றும் அம்பாள் மாதம் என்றும் சிறப்பித்துக்கூறுவார்கள். வீடுகளிலும், கோயில்களிலும் விழாக்களும், விரத வழிபாடுகளும் களைகட்டி விடும். அம்மன், அம்பாள், ஆண்டாள், சக்தி ஸ்தலங்களில் சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் என்று பக்தி மணம் கமழும்.

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகள் மிக விசேடமானவை. 'ஆடிச் செவ்வாய் தேடிக் குளி' என்பது பழமொழி. அதாவது

விரதம் இருந்து எண்ணெய் தேய்த்து குளித்து அம்பாளை வழிபட பெண்களின் மாங்கல்ய பலம் கூடும் என்பது ஐதீகம். ஆடி வெள்ளி வழிபாடு செய்வது சகல பாக்கியங்களையும் அள்ளித் தரும். திருமண பாக்யம் கைகூடிவரும்.

புதுமணத் தம்பதியருக்கும் நீண்டகாலமாக குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்திருப்போருக்கும் நல்ல அறிவாற்றல், புத்தி சாதுரியத்துடன் கூடிய குழந்தைப் பாக்கியம் உண்டாகும். ஆடி ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனைகளையும் நேர்த்திக் கடன்களையும் செலுத்தும் நாளாகக் கருதப்படுகின்றது.

அலகு குத்தி காவடி எடுத்தல், பால்குடம் எடுத்தல், பொங்கல் வைத்து வழிபடுதல், சிறப்பு பூஜைகள் செய்தல், தீ மிதித்தல், கூழ் ஊற்றுதல், அம்மன் கோயில்களுக்குச் சென்று வழிபடுதல் என்று இந்த மாதம் முழுவதும் பக்தி மார்க்கத்தில் மூழ்கித் திளைப்பார்கள்.

ஆடி வெள்ளி, செவ்வாய், ஞாயிறு தவிர ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிக் கிருத்திகை, ஆடி தபசு, ஆடி பௌர்ணமி, ஆடிப்பெருக்கு என்று பலப்பல விசேட நாட்கள் இந்த மாதத்தில் வருகின்றன.

இதில் ஆடி அமாவாசை முக்கியமானது. அன்றைய தினம் கடல், நதிகள் உள்ளிட்ட புனித நீர் நிலைகளில் நீராடி, முன்னோர்க்கு திதி கொடுப்பது மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

அவரவர் குடும்ப வழக்கப்படி வீட்டில் படையல் இட்டு வழிபட்டு முன்னோர் நினைவாக இல்லாதோர், இயலாதோர், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் அன்னதானம், உடை, போர்வை போன்றவற்றை வழங்குவது பல்வேறு பாவங்களை நீக்கி புண்ணிய பலன்களைச் சேர்க்கும்.

ஆடி மாதத்தின் 18 ஆவது நாள் ஆடிப்பெருக்கு என்று கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் பெண்கள் தாலிக்கயிறு மாற்றி புதுக் கயிறு அணிவார்கள். திருநெல்வேலி அருகில் உள்ள சங்கரன் கோவிலில் ஆடி தபசு பிரசித்தி பெற்றது.

கோமதி அம்மனின் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான், புன்னை வனத்தில் சங்கர நாராயணராக ஆடி பௌர்ணமியன்று காட்சியளித்தார்.

ஆடிப்பூரம், ஆண்டாள் அவதாரம் செய்த திருநட்சத்திரம். கன்னிப் பெண்களும் திருமணப் பாக்கியம் கைகூடாமல் இருக்கும் பெண்களும் இந்த நாளில் விரதம் இருந்து பக்தியுடன் ஆண்டாள் அருளிச் செய்த "வாரணமாயிரம் என்று தொடங்கும் பாசுரத்தை பாடி வரதிருமண பிராப்தம் கூடிவரும்.

இத்தனை சிறப்புகள் மிக்க ஆடி மாதத்தில் நல்ல காரியங்களை ஆரம்பிக்கக் கூடாது, செய்யக் கூடாது என்ற கருத்து நிலவுகிறதே எதனால்? இந்த மாதத்தில் விரதங்கள், வழிபாடுகள், கோயில் திருவிழாக்கள் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும்.

ஆன்மீகத்திலும் இறை வழிபாட்டிலும் மனப்பூர்வமாக ஈடுபட வேண்டியிருப்பதால் மற்றக் காரியங்களில் விசேடங்களில் கவனம் செலுத்துவது சிரமம்.

இறைவனை துதிப்பதற்கும் அவன் சிந்தனையாகவே ஆன்மீக ஸ்தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்வதற்கும் இடையூறாக மற்ற விழாக்கள், நிகழ்ச்சிகள் இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே மற்ற சுப விசேடங்கள் இந்த மாதத்தில் தவிர்க்கப்படுகிறது.

## பேருந்துகளில் தொற்று நீக்க நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு இ.போ.ச.தீர்மானம்



(கொழும்பு)

தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பேருந்துகளில் தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

பேருந்து சேவைகளை ஆரோக்கியமான முறையில் முன்னெடுப்பதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதேவேளை, நாடளாவிய ரீதியில் ரயில் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் தினமும் ரயில்களில் தொற்று நீக்கம் செய்யப்படுவதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

## புதிய கடற்படைத்தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் புதிய தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதற்கு முன்னர் நிஷாந்த உலுகேதென்ன, கடற்படை தலைமை நிர்வாகியாக செயற்பட்டுள்ளார்.

நாட்டின் 23ஆவது கடற்படைத் தளபதியாக செயற்பட்ட பியல் டி சில்வா நேற்று ஓய்வு பெற்றதனைத் தொடர்ந்து, அவர் 24ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## வெளிநாடுகளில் கொரோனாவால் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு காப்புறுதி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கைத் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கான காப்புறுதிப் பணத்தை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றினால் வெளிநாடுகளில் இதுவரை 35 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளர் டபிள்யூ. எம். வி.வன்சேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் தலா 6 இலட்சம் ரூபா காப்புறுதி வழங்கப்படும்.

வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கையர்களின் மரணச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் வழங்குமாறு அந்தந்த நாடுகளின் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 10 பேரின் மரண சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-8)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

23

கலாநிதி முருகர் குணசிங்கம்

2010 புள்ளி விபரப்படி சுமார் 47,000 ஈழத்தமிழர்கள் சுவிட்சர்லாந்தில் அகதிகளாக இருக்கின்றார்கள். 1980களில் இருந்து 2010 வரையிலான காலப்பகுதியில் சுமார் 42,000 ஈழத் தமிழர்கள் அகதிகள் அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்து இருக்கின்றார்கள்.

அவர்களுள் 28,963 தமிழர்களுக்கு சுவிட்சர்லாந்து நாட்டுக் குடி உரிமை **(Nationality)** வழங்கப்பட்டு இருக்கின்றது.

மிகுதியாக உள்ளவர்களுள் பெரும்பான்மையினருக்குத் தொடர்ந்து சுவிட்சர்லாந்தில் வாழக்கூடிய உரிமை வழங்கப்பட்டு இருக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட தொகையினருக்குத் தற்காலிக வதிவிட உரிமை வழங்கப்பட்டு இருக்கின்றது. 2002 இல் இலங்கையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் விளைவாக சுவிட்சர்லாந்து நாட்டுக்கு அகதிகளாக வருவது தடைப்பட்டு உள்ளது.

தற்காலிக நுழைவு உரிமை பெற்று வருபவர்களுள் ஒரு சிலர் மட்டும் திரும்ப இலங்கைக்குப் போகாது அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்துத் தங்கி உள்ளனர்.

எனவே 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுவிட்சர்லாந்து நாட்டில் வாழும் ஈழத்தமிழர்கள் தொகையில் பெரும் மாற்றங்கள் இல்லை.

இவர்கள் பெரும்பாலும் சூரிச், பேர்ன் **Zurich-Berne)** போன்ற நகரங்களில்தான் செறிந்து வாழ்கின்றார்கள். சிறுதொகையினர் மேலும் சில சிறிய நகரங்களில் வாழ்கின்றனர்.

### நெதர்லாந்து

இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான தொடர்பு சுமார் 400 ஆண்டுகளைக் கொண்டதாகும். 1602 இல் இலங்கையில் கால்பதித்த நெதர்லாந்தின் அட்மிரல் ஜோரிஸ்வான் **(Jorisvan)** 1638 இல் கண்டி மன்னன் விமலதர்மசூரியாவுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டான்.

அதன்படி போர்த்துக்கீசரை இலங்கையை விட்டுத் துரத்துவதாகவும் அதற்குப் பதிலாகத் தமக்கு வணிகம் செய்வதற்கு உரிமை வழங்க வேண்டும் என்ற ஒப்புதலாகவும் அந்த உடன்படிக்கை அமைந்தது. அதன்படி போர்த்துக்கீசர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

1640களில் காலியும் 1656 இல் யாழ்ப்பாணமும் டச்சுக்காரர் வசமாகியது. 1795 இல் பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றும் வரை இலங்கையை டச்சுக்காரரின் கிழக்கிந்திய வாரியக் கம்பனி ஆண்டு வந்தது.

1656 இல் யாழ்ப்பாணம் டச்சுக்காரர் வசமாகியது. ஆனால் மேற்படி தொடர்புக்குப் பின்னர் 1980களில் ஈழத்தமிழர் நெதர்லாந்துக்கு அகதிகளாகச் செல்லும் வரை வேறு எதுவித நெருக்கமான தொடர்பும் இருக்கவில்லை.

1980 ஆம் ஆண்டுக்குச் சற்று முன்னதாக படித்த சில ஈழத் தமிழர்களும் மாணவர்களும் ஒரு சில வணிகர்களும் நெதர்லாந்துக்குச் சென்று பின்னர் அங்கேயே தங்கியதாகச் சில தரவுகள் மூலம் அறிய முடிகின்றது.

ஆனால் 1980களை அடுத்து இலங்கை அரசும் இலங்கை இராணுவமும் சிங்களக் கூலிப்படையும் ஈழத்தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்ட இனப்படுகொலைகளை அடுத்துப் பெருமளவிலான ஈழத்தமிழர்கள் நெதர்லாந்துக்கு அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாகச் சென்று உள்ளமையை அந்நாட்டின் புள்ளிவிபர மத்தியகுழு **(Central Bireau of Statistics)** அறிக்கைகளில் இருந்து அறிய முடிகின்றது.

ஆனால் மேற்படி குழுவின் அறிக்கைகளும் இன அடிப்படையில் மக்கள் தொகையைப் கணிக்கவில்லை. வயது, திருமணம் ஆனவர்கள், திருமணம் ஆகாதவர்கள், விதவைகள், மணவிலக்குப் பெற்றவர்கள் போன்ற பகுப்பினுள் சகல புள்ளி விபரங்களும் கணக்கிடப்பட்டு இருக்கின்றன. அதன் வழியாக ஈழத்தமிழர்களின் மக்கள் தொகை பற்றிக் கணக்கிட முடிகின்றது.



நெதர்லாந்துக்காரர்கள் சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழர்களின் இரத்தத்தையும் தசையையும் ஒருசேரப் பிழிந்து எடுத்து அவர்களை வறுமைக்கோட்டின் கீழ் விட்டுவிட்டுப் போனவர்கள் இலங்கையின் தேசியச் செல்வங்களையும் வளங்களையும் கப்பல் கப்பலாக ஏற்றித் தமது நாட்டுக்குக் கொண்டு சென்றவர்கள்.

எனவே நாம் அந்த நாட்டுக்கு அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாகப் போனால் அந்த நாடு நிச்சயம் உதவிக்கரம் நீட்டும். ஈழத்தில் மீதமுள்ள தங்கள் உறவுகளுக்கு உதவி செய்யலாம் என்றும் கருதி இருக்கலாம்.

இவ்வாறான எண்ணங்களே, ஈழத் தமிழர்களை நெதர்லாந்து நோக்கி இழுக்கின்ற காரணிகளாக அமைந்து இருக்கலாம். இவை அனைத்திற்கும் மேலாக சிங்கள முப்படைகளிடம் சிக்கிச் சாவதை விட, எப்படியாவது தப்பி நெதர்லாந்துக்கு ஓடி விட வேண்டும் என்ற ஆசையும் ஈழத்தமிழர்களைக் குறிப்பாக இளம் தலைமுறையினரை ஒரு புறம் தள்ளும் காரணியாகவும் மறுபுறம் இழுக்கின்ற காரணியாகவும் அமைந்து இருக்கலாம்.

1980களில் நெதர்லாந்துக்கு அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழர்களுள் பெரும்பான்மையினர் 40 வயதிற்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஆனால் பெரும் எதிர்பார்ப்புகளுடன் நெதர்லாந்து சென்ற தமிழ் அகதிகளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. 1980களில் இருந்து 1987 வரை சுமார் 4000 ஈழத் தமிழ் அகதிகளே நெதர்லாந்துக்குச் செல்ல முடிந்ததைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

அவர்களையும் சிறிய அறைகளில் தங்க வைத்தனர். உணவு, மருந்து வசதிகள் கிடைக்கவில்லை. கடுமையான சட்ட திட்டங்களைப் புகுத்தி அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதில் கால்தாமதங்கள் ஏற்படுத்தினர்.

1985-1990களில் அதிக அளவில் ஈழத்துத் தமிழ் அகதிகள் நெதர்லாந்துக்குச் சென்றதால், நெதர்லாந்து அரசாங்கம் அவர்களின் வருகையைப் புதிய சட்டங்கள் மூலம் தடைப்படுத்தியது.

இதற்கு எதிராகத் தமிழ் அகதிகள் உண்ணாவிரதம் இருந்து தமது எதிர்ப்பைக் காட்டினர். மேற்படி நிகழ்வு அரசாங்கத்தையும் அரச அதிகாரிகளையும் ஆத்திரம் அடையச் செய்தது.

1993 இல் ஈழத்தமிழர்களை அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பிக்குமாறு நெதர்லாந்து அரசு அறிவித்தது. சுமார் 14 ஆயிரம் பேர் விண்ணப்பித்த போதும் 2250 விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்பட்டன. பல ஈழத்தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மேலும் பலர் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவுக்கும் சென்றனர். 2000 ஆம் ஆண்டில் இருந்து ஈழத்தமிழர்கள் அகதிகளாக நெதர்லாந்து வருவது மறுக்கப்பட்டது. ஆனால் 1990களில் இருந்து 2000 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் நெதர்லாந்து அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை அகதிகளின் மனைவி அல்லது கணவன், பிள்ளைகள் அவர்களோடு மீள் இணைவதற்கான உரிமை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஈழத்துத் தமிழ் அகதிகள் பெரும்பாலும் ஆம்ஸ்டர்டாம் **(Amsterdam)** நகரப் பகுதிகளிலும் தெற்கு, வடமேற்கு பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்றனர்.

ஜேர்மனி அரசு போல் நெதர்லாந்து அரசும் அகதிகளை ஒரு நகரத்தில் செறிந்து வாழவிடாது, அவர்களைப் பல்வேறு நகரங்களிலும் குடியமர்த்தி இருக்கின்றது.

இதற்கான அடிப்படைக் காரணம் இன அடிப்படையிலான ஒரு சமூகத்தை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வளரவிடலாகாது என்று கருதுவதே ஆகும்.

எனவே நெதர்லாந்து அரசின் புள்ளி விபரக்குழு அறிக்கையின்படியும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான புள்ளி விபரங்களின்படியும் ஏனைய ஆவணங்களில் இருந்தும் சுமார் 10 ஆயிரம் தமிழ் அகதிகள் இலங்கையில் இருந்து நெதர்லாந்துக்கு 2010 வரையுள்ள காலப் பகுதிக்குள் வந்து இருப்பதாகவும் 2010 இல் அதே அளவு தொகையினர் நெதர்லாந்தில் வாழ்வதாகவும் தெரிவிக்கின்றது.

ஆனால் அதிகாரபூர்வமற்ற அறிக்கைகள் மூலம் சுமார் 15 ஆயிரத்துக்குச் சற்று அதிகமான தமிழ் அகதிகள் நெதர்லாந்தில் வாழ்வதாக அறிய முடிகின்றது. அதிகாரபூர்வமற்ற அறிக்கைகளின் மதிப்பீடுதான் அநேகமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

காரணம் 2010 புள்ளிவிபரக்குழுவின் அறிக்கைப்படி சுமார் 10 ஆயிரம் அகதிகள் வந்ததாகவும் சுமார் அதே அளவு அகதிகள் 2010 இல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றது.

அவ்வாறு எனின் மேற்குறிப்பிட்ட தொகையினரது, நெதர்லாந்தில் பிறந்த பிள்ளைகள் தொகை, மேற்படி அறிக்கையில் சேர்க்கப்படவில்லை என்பதும் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்களுள் கணிசமான தொகையினர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்பதும் சிலர் ஐரோப்பிய, கனேடிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பதும் புள்ளி விபர அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது.

எனவே இந்த அறிக்கை மாறுபட்ட கணக்கையும் தவறான புள்ளி விபரங்களையும் கொண்டு இருப்பதாகக் கருத முடிகின்றது. 2014 பெப்ரவரியில் 1980களில் ஈழத்தில் இருந்து நெதர்லாந்து வந்த அகதி அந்தஸ்துப் பெற்று நிரந்தரமாக வாழும் ஒரு சமூக சேவையாளரை இந்நூலாசியர் நேர்காணல் செய்தபோது அவரின் கணிப்பும் மேற்கூறப்பட்ட அதிகாரபூர்வமற்ற அறிக்கைகளின் கணிப்பும் பெருமளவு சரியாக இருப்பதை அறிய முடிந்தது.

(தொடரும்)

### சாய்ந்த மருது தற்கொலைத் தாக்குதல்

# அடுத்த கட்ட தாக்குதலுக்கு தயாரான சாரா மாயம்

## விசாரணைகள் தீவிரம்

(கொழும்பு)

**நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய தேவாலயம் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் குண்டுதாரியான மொஹம்மட் ஹஸ்தூனின் மனைவியான, 2 ஆம் மகேந்திரன் புலஸ்தினி அல்லது சாரா என அறியப்படும் பெண் இறந்துவிட்டதாக நம்பப்பட்ட நிலையில், அவர் இறக்கவில்லை எனவும் அவர் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்நிலையில், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினை மையப்படுத்தி, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு இது தொடர்பில் விசேட விசாரணை ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

அதன் பிரகாரம் அந்த விசாரணைகளில், இதுவரை இரு சந்தேக நபர்கள் சாட்சி மறைப்பு தொடர்பிலான குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களில் ஒருவர் சாரா என அறியப்படும் தற்போது மாயமாகியுள்ள குண்டுதாரியின் சிறிய தந்தை எனவும் மற்றையவர் அம்பாறை உபகராஜின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அவ்விருவரிடமும் சாரா தொடர்பில் தீவிர விசாரணைகள், தெமட்டகொடையில் உள்ள சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களைத் தொடர்ந்து, 2 ஆம் கட்ட தாக்குதலுக்கு தயாராகி இருந்ததாக கூறப்படும் சஹ்ரானின் பெற்றோர், சகோதரர்கள் உள்ளிட்ட குழு, கல்முனை - சாய்ந்தமருது பகுதியில் கடந்த 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி வீடொன்றுக்குள் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்துகொண்டது. எனினும் அக்குழுவில் இருந்ததாக நம்பப்படும், நீர்கொழும்பு - கட்டுவாபிட்டிய தேவாலய குண்டுதாரியின் மனைவியான சாரா அவ்வீட்டில் இறந்தமைக்கான எந்தத் தடயங்களும் இதுவரை விசாரணையாளர்களால் கண்டறியப்படாத நிலையிலேயே, அவர் அங்கிருந்து தப்பியதாக கிடைக்கப்பெற்றுள்ள உளவுத் தகவல்களை மையப்படுத்தி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

2019 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று சாய்ந்தமருது வீட்டை இராணுவம், அதிரடிப்படை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியதுடன் இதன் போது அவ்வீட்டில் இருந்தவர்கள் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸார் அப்போது அறிவித்தனர். அந்த தாக்குதலின் பின்னர், அவ்வீட்டிலிருந்து பயங்கரவாதி சஹ்ரானின் மனைவியும், மகளும் காயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதுடன், சஹ்ரானின் மனைவி தற்போதும் சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சாய்ந்த மருது வீட்டில் 17 பேர் குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த 17 பேர் தொடர்பிலும் டி.என்.ஏ. பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் மகேந்திரன் புலஸ்தினி அல்லது சாரா எனும் பெண்ணின் பெற்றோரிடமிருந்து பெறப்பட்ட டி.என்.ஏ. மூலக் கூறுகளுடன், சாய்ந்த மருது வீட்டில் இறந்ததாக நம்பப்படும் சடலங்கள், சடலங்களின் பாகங்களில் இருந்து பெறப்பட்ட எந்த டி.என்.ஏ. மூலக் கூறுகளும் ஒத்துப் போகவில்லை.

இந்நிலையிலேயே சாய்ந்தமருது வீட்டில் தாக்குதல் நடத்தப்பட முன்னரேயே சாரா அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டதாக நம்பப்படும் நிலையில் கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவு அது குறித்து விசாரித்து வருகின்றது.

அதன் பிரகாரமே பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், சாராவின் சிறிய தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதல் நடந்த காலப்பகுதியில் குறித்த பொலிஸ் அதிகாரிகளுவாஞ்சிக் குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியுள்ளமையும், குறித்த சம்பவத்தை அண்மித்த காலப்பகுதியில் அவர் கல்முனை - சாய்ந்த மருது பகுதிக்கு சென்றுள்ளமை தொடர்பிலும் சில தகவல்கள் உள்ள நிலையில், அதனை உறுதி செய்யவும், சாரா தப்பிச் செல்ல குறித்த பொலிஸ் அதிகாரி உதவினாரா என அறியவும் விசாரணைகள் தொடர்கின்றன.

சாரா தொடர்பில் எந்த தகவலும் இல்லாத நிலையில், அவர் வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் விசாரணைகளை தொடர்கின்றனர். (2)

## கடற்படைக்கு புதிய தளபதி நியமனம்



(கொழும்பு)

இலங்கை கடற்படையின் 24 ஆவது தளபதியாக வைஸ் அட்மிரல் நிஷாந்த உளுகே தென்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படைக்கும் பொதுவாக தாய்நாட்டிற்கும் ஒரு உன்னத சேவையை வழங்கிய, அட்மிரல் பியால் டி சில்வா, கடற்படை தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து இவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை கடற்படையின் தலைமைத் தளபதியாக ரியர் அட்மிரல் நிஷாந்த உளுகே தென்ன 2019 மே 04 முதல் அமுலுக்கு வரும் வகையில், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## ஊரடங்கு உத்தரவு அவசியமற்றது

(கொழும்பு)

நாட்டில் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



கொரோனா வைரஸ் தொற்று நாடுமுழுவதையும் உள்ளடக்கியதாக இதுவரை எந்த அறிக்கையும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு ஏற்கனவே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (ஜ-4)

## கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பி.சி.ஆர்.பரிசோதனைகள் நிறைவு

(கொழும்பு)

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திலுள்ள கைதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் தொடர்பினை வைத்திருந்த அனைவருக்கும் முன்னெடுக்கப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



கந்தகாடு விவகாரம் தொடர்பாக நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கந்தகாடு விவகாரங்களில் தொடர்புபட்டுள்ள அனைவரினது பி.சி.ஆர்.பரிசோதனை அறிக்கைகள் நேற்று முன்தினம் முதல் கிடைக்கப்பெற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தின் ஊடாக மாத்திரம் இதுவரையில் 532 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 444 கைதிகளும் 64 பணிக்குழாமினரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2020-16.08.2020



சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் தன் சொந்த வீடான தனுசு இராசியில் உலா வருகின்றார். குரு வக்கிரம் பெற்றிருப்பதால் உங்களுக்கு மிகுந்த நற்பலன்கள் வரப் போகின்றது. வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை கிடைக்கும். மாலை கிடைக்காதவர்களுக்கு மாலை கிடைக்கும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜுலை 27ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் பெயர்ச்சியாகிப் போகின்றார். இது ஒரு பொன்னான நேரமாகும். தொட்டது துலங்கும், கேட்டது கிடைக்கும், நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப முன்னேற்றத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் அகலும். இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். வாங்கிய கடனைத் கொடுத்து மகிழும் நேரம் இது.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜுலை 30ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் உங்கள் இராசிக்கே வரும்பொழுது பிள்ளைகள் வழியில் ஒரு நல்ல தகவல் வந்து சேரலாம். அவர்களின் திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். பழைய வாகனங்களை பழுது பார்த்து புதுப்பிக்கும் எண்ணம் உருவாகும். மனக்கிலேசங்கள் அகலும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 12ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் வருகின்றார். மேஷம், செவ்வாய்க்கு சொந்த வீடாகும். அதுவும் இலாப ஸ்தானமாகும். 6 ஆம் இடத்திற்கும் செவ்வாய் அதிபதியாக விளங்குவதால் இக்காலத்தில் உத்தியோகம் பற்றிய கவலை அகலும். வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் நல்ல தகவல் இல்லம் தேடி வரும்.




பணியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் கூட மீண்டும் பணியில் சேரும் வாய்ப்புக் கிட்டும். சம்பளப் பாக்கிகள் சிலருக்கு வந்து மகிழ்விக்கும்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் செல்கின்றார். இந்த நேரம் எல்லா வழிகளிலும் உங்களுக்குநன்மை கிடைக்கும் நேரமாகும். இதுவரை இருந்த தடைக்கற்கள், இனி படிகற்களாக மாறும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். உயர் நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். 'உடன் பிறப்புகள் நல்ல வேலையில் இருந்தும் இன்னும் திருமணம் நடைபெறவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு கல்யாணத் தகவல் வந்து கைகூடலாம். இம்மாதம் இல்லத்து பூஜை அறையில் லட்சுமியின் படம் வைத்து புதன்கிழமை தோறும் லட்சுமி கவசம்பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்!

இம்மாதம் உங்கள் இராசியைக் குரு பார்ப்பதால் குழப்பங்கள் தீரும். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறப்புகளின் வாழ்க்கை ஒளிமயமாக அமைய வழிபிறக்கும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி புதிய முடிவெடுப்பீர்கள். கண்ணன் வழிபாடு கவலை போக்கும். பணிபுரியும் பெண்களுக்கு இதுவரை இருந்த இடையூறுகள் அகலும்

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். அவரோடு சுக்கிரனும் இணைந்திருக்கின்றார். உங்களுடைய இராசியில் தனாதிபதி சூரியன் வீற்றிருக்கின்றார். எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாக அமையும். வருமானப் பற்றாக்குறை அகலும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜுலை 27ஆம் திகதி கடக இராசியான உங்கள் இராசிக்கு புதன் வருகின்றார். சகோதர ஸ்தானத்திற்கும், விரய ஸ்தானத்திற்கும் அதிபதியான புதன், உங்கள் இராசியில் வரும்பொழுது உடன்பிறப்புகளால் விரயங்கள் ஏற்படலாம். அவர்களின் கல்யாணம், வேலைவாய்ப்பு, மேற்படிப்பு போன்ற வற்றுக்கு முயற்சி செய்தால் அதுவும் கைகூடும். வழக்குகள் சாதகமாக முடியும். உறவினர் பகை அகலும். இடம் வாங்கும் யோகம் உண்டு.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜுலை 30ஆம் திகதி மிதுன இராசிக்குச் சுக்கிரன் வருகின்றார். இக்காலத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் கூட ஒரு சிலருக்கு உறுதியாகலாம். உத்தியோகத்தில் கூட ஒரு சிலருக்கு, சில பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படலாம். குருவின்பார்வை சுக்கிரன் மீது பதிவதால் திட்டமிடாத காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம். திடீர் மாற்றங்கள்




உருவாகலாம்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 12 ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அப்போது தொழில் ஸ்தானம் வலுவடைகின்றது. எனவே இதுவரை மூடிக்கிடந்த தொழிலுக்கு இனி திறப்பு விழா நடத்துவீர்கள். புதியதாக வேலைக்குச் சேர விண்ணப்பித்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் வரலாம். இடம், பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உடன் பிறப்புகளுக்கு வேலை கிடைக்கும். உபரி வருமானங்கள் வந்து சேரும்.

உங்கள் செயற்பாடுகளில் குற்றம் குறை கண்டுபிடித்தவர்கள் இப்பொழுது ஒதுங்கிச் செல்வர். வீண் பழிகள் அகலும். 'பழைய வாகனங்கள்வாங்கலாமா?, புதிய வாகனங்கள் வாங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள்.

இம்மாதம் இல்லத்துப் பூஜையறையில் கரும்பு-வில் வைத்த அம்பிகை படம் வைத்து சிவபதிகம் பாடி வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்!



இம்மாதம் நினைத்தது நிறைவேறும் மாதமாகும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் யோகம் உண்டு. புதிய உத்தியோகம் கிடைக்கலாம்.

பிள்ளைகளின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பக்கத்து வீட்டாரின் பகைமாறும். தாய் வழி ஆதரவோடு தடைக்கற்களை அகற்றிக் கொள்வீர்கள். சூரிய வழிபாடு சுகத்தை வழங்கும்.

(தொடரும்)

# அநாவசியமாக வெளியே செல்வதைத் தவிருங்கள்

## மருந்தகக் கூட்டுத்தாபனம் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில்கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருக்கும் நிலையில், எதிர்வரும் வாரங்களில் மக்கள் அநாவசியமாக வெளியே செல்வதைத் தவிர்த்துக்கொள்ளு மாறு வலியுறுத்தியிருக்கும் இலங்கை மருந்தகக்கூட்டுத் தாபனத்தின் தலைவரும் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணருமான பிரசன்ன. குணசேன, மக்கள் தமது செயற்பாடுகளை முறையாகக் கட்டுப்படுத்திக் கொண்டால், கொரோனா வைரஸ் பரவல் பேரழிவிலிருந்து மீளமுடியும் என்றும், அன்றேல் நிலைமை மேலும் மோசமடையும் என்றும் எச்சரித்துள்ளார்.

நாட்டில் கடந்த மார்ச் மாத மளவில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடையத் தொடங்கியதை அடுத்து. நாடு முற்றாக முடக்கப்பட்டு தொற்றுப் பரவல் ஓரளவிற்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும் மீண்டும் இம்மாத ஆரம்பத்தில் வெலிக்கடை சிறைச்சாலையில் கைதியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதைய டுத்து முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளில் கந்தகாடு போதைப் பொருள் புனர்வாழ்வளித்தல் நிலையம், இராஜாங்கனைப் பகுதி ஆகிய வற்றில் பெருமளவானோர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள் ளது.

இதனையடுத்து நாட்டில் வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்படுவதற்கான அச்சுறுத்தல் நிலை தோன்றியுள் ளது.

இத்தகைய சூழ்நிலையில் மக்கள் செயற்பட வேண்டிய விதம் குறித்துத் தெளிவுபடுத்தும் வகையில் வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன, தெரிவித்துள்ளதாவது, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பொன்று ஏற்பட்டது.

இதனையறிந்து கொண்ட மக்கள் பொருட்களை வாங்குவதற்காகப் பல்பொருள் அங்காடிகளுக்குச் சென்று முட்டி மோதுகிறார்கள். நீங்கள் செயற்பட வேண்டிய முறை இதுவல்ல. எதிர்வரும் வாரங்களில் நீங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்வதென்றால், ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தியுங்கள்.

உங்களுக்கு அல்லது உங்களது உறவினர்களுக்கு வாழ்க்கையை நடத்திச்செல்வதற்கு மிகவும் அத்தியாவசியமான தேவைப்பாடுகள் காணப்படுமாயின், அவற்றுக்காக மாத்திரம் வெளியே செல்லுங்கள். மாறாக திருமண நிகழ்வுகள், மரணச் சடங்குகள், நண்பர்களைச் சந்தித்தல், பிரத்தியேக வகுப்புகள் போன்றவற்றுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

நாட்டுமக்கள் அனைவரும் தத்தமது செயற்பாடுகளை சரியாகக் கட்டுப்படுத்திக் கொண்டால் எமது நாடு இந்தப் பேரழிவிற்குள் சிக்குவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறல்லாவிடின், தற்போதுள்ள நிலைமை மேலும் மோசமடைவதற்கும் இடமிருக்கிறது என்பதை மனதிலிருத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நெல் கொள்வனவிற்கு திறைசேரி நிதி விடுவிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோ கிராமிற்கு 50 ரூபா உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் 2020 சிறு போகத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியினால் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

நிதி பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.2020 சிறு போகத்தில் அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு கிலோ கிராம் நெல்லுக்கு 50 ரூபா உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் கொள்வனவு செய்யும் பணியை தற்பொழுது ஆரம்பித்துள்ளது.

கடந்த வருடங்களில் நாட்டரிசி நெல் கிலோ கிராம் ஒன்று 38 ரூபா மற்றும் சம்பா நெல் கிலோ 41 ரூபா என்ற அடிப்படையிலும் கொள்வனவு செய்யப்பட்டதுடன் ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பு வதற்கான சௌபாக்கிய தொலைநோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக. புதிய அரசாங்கத்தினால் 2019/2020 சிறுபோகத்தில் அனைத்து நெல்வகைகளுக்கும் ஆகக் கூடிய விலையை வழங்கி ஒரு கிலோ கிராம் நெல் 50 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதற்கு அமைவாக இம்முறை சிறுபோகத்திலும் விவசாயிகளின் நெல் அறுவடைக்காக ஆகக்கூடிய விலை ஒன்று வழங்கப்படுவதை உறுதி செய்து ஒரு கிலோ கிராம் நெல் 50 ரூபா என்ற உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபை கொண்டுள்ள நாடு முழுவதிலும் அமைந்துள்ள அனைத்து களஞ்சியசாலைகளும் தற்பொழுது திறக்கப்பட்டுள்ளன.

தாமதமின்றி விவசாயிகளிடம் இருந்து மொத்த நெல் அறுவடையை அரசாங்கம் உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி தற்பொழுது திறைசேரியினால் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்

## அது என்ன சிவ பூஜையில் கரடி?

சிந்தனையை அங்கும் இங்கும் சிதற விடாமல் செல்ல வேண்டிய பாதையில் சீராகச் செலுத்துவதே ஒருமுகப்படுதல், ஒன்றி இருத்தல்.

"அன்றி இருந்த நினைமின்கள்!
உந்தனுக்கு ஊனமில்லை!"


என்று பாடுகின்றார் அப்பர் பெருமான்.

ராமலிங்க அடிகளும் 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்' என்றே பாடுகின்றார். கோயிலில் சென்று இறைவனை தொழும் போது மூலஸ்தான மூர்த்தியை தவிர கருவறையில் விளங்கும் கடவுளை தவிர வேறெதையும் நெஞ்சில் நினைக்கக் கூடாது. இதுவே ஒருமைப்படுதல். 'அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை' என்று பாடினார் கவியரசர் கண்ணதாசன்.

அந்தப் பெண் என்ன புடைவை கட்டியிருக்கிறாள்? இவர் என்ன சட்டை போட்டிருக்கிறார்? இந்த அம்மா பூஜை தட்டில் இருப்பது என்னென்ன? அங்கு அவர் என்ன அலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறார்? பிரசாதம் ஏதாவது தருவார்களா? வெளியில் விட்ட செருப்பு பத்திரமாக இருக்குமா? என்றெல்லாம் சந்நிதியில் போய் தாறுமாறாக எண்ணத்தை அலையவிடாமல் ஒரு முகப்பட்டு ஒன்றி இருந்து இறைவனைத் தரிசிக்க வேண்டும்.

ஆன்மாக்கள் லயிக்கும் இடம் தான் ஆலயம். ஆலய வழிபாட்டிற்கு மட்டும் அல்ல! ஏற்றுக் கொண்ட இலட்சியத்தை அடைவதற்கு ஒவ்வொருவருக்கும் தேவையானதே ஒரு முகப்படுதல். 'ஹார்ஸ்பவர்' என்று பாராட்டப்படும் குதிரைக்குப் பூட்டப்பட்ட சேணம் என்பது அதன் கண் ஒரு காட்சியையே காண வேண்டும் என்பதற்காகவே வடிவமைக்கப்பட்டது.

அந்தப் பக்கம், இந்தப் பக்கம் பார்க்காமல் பயணப்படும் பாதையிலேயே கவனம் வைப்பதால் தான் இலக்கை நோக்கி குதிரை குதித்து ஓடுகிறது. சுவாமி விவேகானந்தரின் ஒருமைப்பட்ட மனம் நம் அனைவருக்கும் வாய்த்தால் எடுத்த காரியம் யாவினும் நாம் வெற்றி பெறலாம். நூலகம் ஒன்றில்



விவேகானந்தர் கனமான புத்தகம் ஒன்றை முழுக்கவனம் செலுத்திப் படித்துக் கொண்டிருக்கும் போது அவரின் நண்பர் ஒருவர் அருகே வந்தார். புத்தகம் படிக்கும் போது அவருக்கு இடையூறு செய்ய வேண்டாம் என்று எண்ணிய அவர் சற்றுத் தள்ளி நின்றபடியே அவர் படிக்கும் காட்சியையே உற்றுப் பார்த்தபடி இருந்தார்.

கனமான புத்தகம் ஒரு தகவல் களஞ்சியம். ஓவியங்கள் எதுவும் அதில் இடம்பெறவில்லை. விவேகானந்தர் பக்கம் ஒன்றில் விநாடி நேரம் தான் கவனம் செலுத்தினார். உடன் அடுத்த பக்கம், அடுத்த பக்கம் எனப் புரட்டிக் கொண்டிருந்தார்.

நண்பருக்கோ வியப்பும், அவர் என்ன செய்கிறார் என்று அறிந்து கொள்ளும் ஆர்வமும் மேலிட்டன. சித்திரங்கள் புத்தகத்தில் இடம்பெற்றிருந்தால் இப்படி சீக்கிரம் பக்கங்களைத் தள்ளலாம்.

படங்கள் இல்லாத புத்தகத்தின் பக்கங்களை ஒவ்வொன்றாக விறு விறுவென்று பார்த்தபடி தள்ளுகிறாரே என்று எண்ணியபடி ஓரத்திலேயே நின்று கொண்டிருந்தார் நண்பர்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இரு சிறுமிகளின் சடலங்கள் மீட்பு

(களுத்துறை)

களுத்துறை - பயகலவிலுள்ள கடற்பகுதியில் கடந்த திங்கட்கிழமை கடல் அலையில் அள்ளுண்டு செல்லப்பட்ட இரண்டு சிறுமிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுமிகளின் சடலங்கள் நேற்று முன்தினம் காலை மக்கொன பகுதியில் உள்ள கடற்கரையில் மீட்கப்பட்டுள்ளன. சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த 13 மற்றும் 15 வயதுடையவர்கள் இரு சகோதரிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஜ-4)

## சிறைக்கு போதைப் பொருள் கொண்டு சென்றவர் கைது

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலைக்குள் புகையிலை, ஹெரோயின் மற்றும் கையடக்க தொலைபேசி ஆகியவற்றை விற்பனை செய்ய முயற்சித்த 2 சந்தேக நபர்கள் உள்ளிட்ட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## காலியில் 34 பேர் தனிமைப்படுதல்

(கொழும்பு)

கொரோனா சந்தேகத்தில் காலி தெளிகட- மாஜுவான பிரதேசத்தில் 34 பேர் தனிமைப்படுதலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் ஆலோசகராக பணியாற்றும் ஒருவர் கடந்த 5ஆம் திகதி ஹபராதுவ பிரதேசத்திற்கு வந்தள்ளார்.

இதனையடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய நபர்களே நேற்றைய தினம் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 60 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 160 | 240 | 300 |
| தக்காளி | 120 | 100 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 130 | 120 | 120 | 120 |
| கரட் | 100 | 170 | 160 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 140 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 100-250 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 200 | 220 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 180 | 220 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 150 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 45 | 30-60 | 60-80 |
| இராசவள்ளி | -- | 250 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 320 | -- | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 70 | 30-40 | 60 |




# சிட்டுக்குருவியின் கர்வம்

ஒரு கடற்கரையின் அருகில் உள்ள ஒரு செடியில் இரண்டு சிட்டுக்குருவிகள் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. முட்டையிடும் பருவம் வந்ததும் பெண் சிட்டுக்குருவி ஆண் சிட்டுக் குருவியிடம் இந்தக் கூடு பாதுகாப்பானது தானா? என்று கேட்டது.

இந்தக்கூடு பாதுகாப்பானது தான் என்றது ஆண் சிட்டுக்குருவி. அருகில் கடல் இருக்கிறதே அது பொங்கிவந்தால் நம் முட்டைகள் அழிந்துவிடுமே என்றது பெண் சிட்டுக்குருவி.

இந்தக் கடலுக்கு என்னிடம் பகைகொள்ளும் அளவுக்குத் துணிவில்லை என்றது ஆண் சிட்டுக்குருவி கர்வமாக.

அதற்கு அறிவுரை கூறும் வகையில் பெண் சிட்டுக்குருவி உனக்கும் கடலுக்கும் வேறுபாடு இருக்கிறது. அதன் வலிமையை உன் வலிமையோடு ஒப்பிடுவது தவறு என்றது.

இரண்டொரு நாட்களில் கடல் பொங்கி வந்தது. கூட்டிலிருந்த முட்டைகளை அடித்துக் கொண்டு சென்றது. இதனைக் கண்ட பெண் சிட்டுக்குருவி பதறியது.

அதற்கு ஆறுதல் கூறிய ஆண் சிட்டுக்குருவி, நீ கவலைப்படாதே, முட்டைகளை நான் மீட்டுக் கொண்டுவருவேன் என்று உறுதியளித்தது.

ஆண் சிட்டுக்குருவி, பறவைகளின் ராஜாவான கருடனிடம் சென்று முறையிட்டது. கருட ராஜா தன் இறைவனான ஸ்ரீ விஷ்ணுவிடம் அறிவித்தார்.

ஸ்ரீவிஷ்ணு சிட்டுக்குருவியின் முட்டைகளை திருப்பிக் கொடுத்துவிடுமாறு கடலுக்குக் கட்டளையிட்டார்.

இறைவனின் கட்டளைக்குப் பணிந்த கடல், அந்தச் சிட்டுக்குருவியின் முட்டைகளை மீண்டும் அதன் கூட்டில் கொண்டு வந்து வைத்தது.

**நீதி: எவன் ஒருவன் தன் வலிமையையும் மற்றொருவரின் வலிமையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறானோ அவன் துன்பப்படுவதில்லை. அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்காதவன் அழிவையே சந்திக்கிறான்.**



# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை

மூவேந்தர்கள் நிச்சயம் சங்ககாலத்தில் தமிழகத்தை அவரவருக்குண்டான பகுதிகளில் ஆண்டு வந்தார்கள் என்பது மட்டும் உறுதி.

தகுந்த சான்றுகள் இல்லாததால் தமிழக வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்வதில் நமக்கு நிறையத் தடைகள் உள்ளன.

இதுவரை நமக்குக் கிடைத்திருக்கும் தமிழக வரலாற்றுக்கு முக்கிய ஆதாரமாக இருப்பவை கல்வெட்டுக்கள். கல்வெட்டுக்களின் வழியாகவே சோழ அரசர்களையும் அவர்களின் ஆட்சிக்காலம் பற்றியும் மட்டுமல்ல சோழர்காலச் சமூக வாழ்க்கை எப்படி இருந்தது என்பதில் ஆரம்பித்து அவர்களின் கலை பாடலுக்கு என்னனென்ன இசைக்கருவிகள் உபயோகப்படுத்தினார்கள்? எத்தனை வகையான கூத்துக்கள் சோழர் காலத்தில் இருந்தன? பொருளாதாரம் எப்படி இருந்தது? ஆட்சியிலிருப்பவர்கள் எப்படி வரி விதித்தார்கள்? வரியை எவ்வாறு வசூலித்தார்கள்? நிலத்தை எப்படி அளந்தார்கள்? என்று பலவற்றையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றன.




இன்னும் படிக்க முடியாத, வெளியே கொண்டு வரப்படாத சோழர்காலக் கல்வெட்டுக்கள் ஏராளமானவை பூமிக்கடியில் சிக்கியுள்ளன.

அல்லது அவை இயற்கையாலும் நம்முடைய கவனமின்மையாலும் சீரழிந்துள்ளன.இந்த நிலையில் சொற்ப அளவிலான கல்வெட்டுக்களைக் கொண்டு ஒரு வரலாற்றை நிர்ண யம் செய்வது அசாத்தியமான செயல்.

அதைத்தான் நம் தொல்லியல் அறிஞர்களும் வரலாற்றாய்வாளர்களும் செய்து வரலாற்றுக்கு ஒரு புதிய வெளிச்சம் அளித்துள்ளனர்.

முடியாட்சியின் வழக்கப்படி பராந்தகனுக்கு அடுத்ததாக அவருடைய மகன் கண்டராதித்தன் ஆட்சியில் அமர்ந்தார்.

அவர் மிகக் குறைந்த காலமே, மொத்தம் 8 ஆண்டுகள்தான் ஆட்சி செய்தார்.

இவர் மனைவி செம்பியன்மாதேவியார் ராஜராஜ சோழன் ஆட்சிக்காலம் வரைக்கும் உயிரோடு வாழ்ந்தார்.

கண்டராதித்தன் இதைச் சாதித்துக்காட்டினார் என்று பெரிதாக எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. சோழர்களின் ஆட்சியைப் பத்திரமாகக் கட்டிக் காத்ததே அவருடைய ஒரே சாதனை.

நியாயமாக கண்டராதித்தனுக்கு அடுத்ததாக அவருடைய மகனான உத்தம சோழன் என்கிற மதுராந்தகன் தான் அரியணையில் ஏறியிருக்க வேண்டும்.

ஆனால் அப்போது மதுராந்தகன் சின்னஞ் சிறுவனாக இருந்ததால் கண்டராதித்தனின் சகோதரரான அரிஞ்சயன் அரசரானார்.

துரதிர்ஷ்டம் சோழர் வரலாற்றில் பெரிய சாதனை செய்ய அரிஞ்சயன் துடித்ததெல்லாம் ஒரே வருடத்தில் கலைந்து போனது. எதிர்பாராத அவருடைய மரணம். அடுத்த சோழர் அரசைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளியது.

மதுராந்தகன் இன்னும் குழந்தையாகவே இருந்ததால் அரிஞ்சயனின் மகன் இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தரசோழனுக்கு (கி.பி. 957-73) அரசாளும் வாய்ப்புக் கிடைத்தது.

இந்தச் சமயத்தில் இராஷ்டிரகூடர்கள் தொண்டை நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிச் சோழர்களுக்குப் புதுத் தலைவலியை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். இதனால் புதிய மன்னருக்கு மீதமுள்ள சோழ நாட்டின் பகுதிகளைக் காப்பாற்றியாக வேண்டிய பொறுப்பு இருந்தது.

சுந்தரசோழன், தன் மூத்த மகன் இரண்டாம் ஆதித்தன் என்கிற ஆதித்த கரிகாலனுக்கு முடிசூட்டி அவனை இளவரசராக அறிவித்தார்.

(தொடரும்)

சரியானது என்று உணர்ந்த பின்னும் அதைச் செய்யாது இருந்தால், அது மகா கோழைத்தனம்.
– தத்துவஞானி கன்பியூஷியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீர்ப்புக்குப் பின்பான கை கழுவலும் கை கழுவலுக்குப் பின்பான தீர்ப்பும்

**நீரின்றி அமையாது உலகு**
என்பார் வள்ளுவர்

தண்ணீர் என்பது அருந்துவதற்கு மட்டுமல்ல. இந்த உலக மக்கள் தங்கள் மீதான அழுக்கை – தோசத்தை – பாவத்தை நீக்குவதற்கும் தண்ணீரே மூலாதாரமாயிற்று.

சிவப்பரம்பொருள் தன் தலையில் கங்கையை அணிந்துள்ளார். அதனால் அவரை கங்கை கொண்ட சோழேச்சரத்தான் என்று அழைப்பர்.

மற்றவர்களால் முன்வைக்கப்படும் துன்பங்களும் பாவபரிகாரங்களும் தன் மீது படியாதிருப்பதற்காக புனித கங்கையை சிவப்பரம்பொருள் தன் தலையில் சூடிக்கொண்டார்.

இதுதவிர, இந்த வையகத்தில் முதன்மையானது தண்ணீர் என்பதால் முழுமுதற் கடவுளாகிய சிவப்பரம்பொருள் கங்கையை தன் தலையில் வைத்து அதற்குரிய முதன்மை இடத்தைக் கொடுத்தார் என்றும் நம் சிற்றறிவு உணர்கிறது.

எதுவாயினும் தண்ணீர் பாவத்தை நீக்க வல்ல ஒளடதம் என்பதில் எவருக்கும் கருத்து மறுப்பு இருக்க முடியாது.

மற்றவர்களின் பாவத்தைச் சுமந்த இயேசுபிரானை சிலுவையில் ஏற்ற வேண்டுமென மன்னன் பிலாத்திடம் கோரிக்கை விடப்படுகின்றது.

இயேசுபிரான் மீது எந்தக் குற்றத்தையும் என்னால் கண்டுகொள்ள முடியவில்லை என்று கூறும் மன்னன் பிலாத்; இந்தப் பாவம் என்மேல் விழாதிருக்கட்டும் என்று கூறியபடி, தன் கைகளைக் கழுவிக் கொள்கிறான்.

ஆக, கைகழுவும் காரியம் பாவத்தை நீக்குவதாக எல்லாச் சமயத்தவர்களாலும் நம்பப்படுகிறது.

இவை ஒருபுறமிருக்க, தபால் மூல வாக்களிப்பில் பங்கேற்றவர்கள் வாக்களிப்புக்கு முன்னதாக தங்கள் கைகளைக் கட்டாயம் கழுவ வேண்டும் என்ற நிபந்தனை இறுக்கமாக விதிக்கப்பட்டிருந்தது.

இஃது கொரோனாத் தொற்றில் இருந்து தம்மையும் மற்றவர்களையும் பாதுகாப்பதற்கானதாக இருந்தாலும்,

இதற்குள் இன்னுமொரு தத்துவமும் இருப்பதாக நம் சிற்றறிவு சிந்திக்கிறது.

அதாவது வாக்களிப்பதற்கு முன்னதாக உங்கள் கைகளைக் கழுவி பாவத்தை நீக்கிக் கொள்ளுங்கள். பாவம் நீக்கப்பட்டு புனிதமாக வாக்களியுங்கள். பாவம் கழுவப்பட்ட பின்பான வாக்களிப்பு தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல தலைமையைத் தருவதாக அமையும் என்பதாலும் கைகழுவுதல் நடக்கிறதோ! என்று எண்ணத் தோன்றுகிறது.

அதாவது மன்னன் பிலாத் தீர்ப்பைக் கூறிவிட்டு கைகளைக் கழுவினார்.

நாங்கள் கைகளைக் கழுவிவிட்டு தீர்ப்பை வழங்குகிறோம். அவ்வளவுதான்.

# பொதுமக்களின் பாதுகாப்பில் அரசாங்கம் அதிக கவனம்

(கொழும்பு)

**கொவிட்- 19 வைரஸ் பரவலை தேர்தல் பிரசாரமாகக் கொண்டு, அரசாங்கத்தை எவராலும் பலவீனப்படுத்த முடியாது. நெருக்கடியான நிலையில் குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்த்தரப்பினர் முன்னெடுக்கும் தேர்தல் பிரசாரங்கள் வெறுக்கத்தக்கது. பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த அரசாங்கம் அதிக கவனம் செலுத்தும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

மேலும், கொவிட் -19 வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னரே தேர்தல்கள் ஆணைக்குழு பொதுத்தேர்தலுக்கான திகதியை அறிவித்தது.

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றி. தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பாதுகாப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டன. கந்தகாடு புனர்வாழ்பு மையத்தில் இருந்து புதிய வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து வைரஸ்தொற்றின் இரண்டாம் சுற்று ஆரம்பமாகியுள்ளது.

கொவிட் -19 வைரஸ் பரவலை காரணம்காட்டி எதிர்த்தரப்பினர் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியற்சிக்கிறார்கள். நெருக்கடியான நிலையில் குறுகிய அரசியல் நோக்கங்களை கொண்டு அரசியல் இலாபம் தேடிக் கொள்வது வெறுக்கத்தக்க செயற்பாடாகும்.

அரசியல் ரீதியில் பெரும்பான்மையின மக்கள் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எடுத்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் பொதுத் தேர்தலில் ஏற்படாது.

பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்கும். மக்களும் தற்போதைய நெருக்கடியான நிலையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

தேவையற்ற பயணங்களை முழுமையாக தவிர்த்துக் கொண்டு அரசாங்கத்தின் செயற் பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# நாட்டில் மூவாயிரம் பேர் சுயதனிமைப்படுத்தல்

(கொழும்பு)

நாட்டில் 16 மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் பணியாற்றிய ஊழியர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பைப் பேணிய நபர்கள் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

"கம்பஹா. பொலநறுவை. காலி. கொழும்பு. இரத்தினபுரி. குருநாகல். களுத்துறை. கண்டி. அநுராதபுரம், யாழ்ப்பாணம். கேகாலை. மொனராகலை. அம்பாந்தோட்டை, புத்தளம், மாத்தறை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்ட 16 மாவட்டங்களில் வசிக்கும் பொதுமக்களை சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க செயற்படுமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏனெனில் சமூகத்தில் கொரோனா மேலும் பரவுவதனால் நாட்டில் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் கடுமையாக பாதிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஜ-8)

## பிதிர்க்கடன் வில்லூன்றியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து சுகா தாரக் கட்டுப்பாடுகளுக்கமைய தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப் பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**கொள்கையில் நம்பிக்கை இருக்க வேண்டியதுதான். அது குருட்டுத்தனமாக இருக்கக்கூடாது.**
**-ஆவ்பரி**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** கொடிகாமம், கறுக்காய், வாழைத்தோட்டம், கரம்பன், வறணி, கரம்பைக் குறிச்சி, சுட்டிபுரம் அம்மன் கோவிலடி, இயற்றாலை, நாவற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், பயலொக்தொலைத் தொடர்புநிலையம் மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### நல்லதை மட்டும் தேடுங்கள்



❖ வாழ்க்கை இன்னதென்று மிருகங்களுக்கு தெரிவதில்லை. மனிதனும் அப்படி வாழ்ந்தால்நிச்சயமாக அவன் மிருகத்தை விட மேம்பட்டவன் அல்ல.

❖ சட்டத்தை உருவாக்குபவர்கள் அதற்கு கீழ்ப்படிதல் வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் சட்டத்திற்கு மதிப்பளித்தால் மக்களும் மதிப்பளிப்பார்கள்.

❖ மனிதப்பிறவி மதிப்பு மிக்கது. கடவுளின் வெகுமதியான இப்பிறவியைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், பெரும் பாவம் செய்த வராகி விடுவோம்.

❖ உடல் படகு போன்றது. பிறவி என்னும் ஆற்றைக் கடந்து கரைசேர படகின் உதவி தேவை. அது வரை படகில் ஓட்டை விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

❖ உள்ளத்தில் கடவுளை நிலைநிறுத்துங்கள். நல்லுணர்வு என்னும் மலர்களால் அவரை அழகுபடுத்துங்கள்.

❖ பிறரிடம் குறை தேடாதீர்கள். அதே சமயம், நற்குணங்களை பாராட்டாமல் இருக்கக் கூடாது.

# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை
## யாழ்ப்பாணம்

### வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு, அழுக்குத் துணிகள் சலவைச் சேவை, சுத்திகரிப்பு பொருட்களை வழங்குவதற்கான பெறுகைகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் சுத்திகரிப்பு, குளிரூட்டிகள் சுத்திகரிப்பு – 2020/2021

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு, அழுக்குத் துணிகள் சலவைச் சேவை, சுத்திகரிப்பு பொருட்களை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2020/01 தொடக்கம் 17வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ். மாவட்டம்) | 10000.00 |
| 02. | D/JF/2020/02 | உலர் உணவு வழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | 80000.00 |
| 03. | D/JF/2020/03 | | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | 16000.00 |
| 04. | D/JF/2020/04 | | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | 80000.00 |
| 05. | D/JF/2020/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 25000.00 |
| 06. | D/JF/2020/06 | | ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்துறை | 30000.00 |
| 07. | D/JF/2020/07 | | பிரதேச வைத்தியசாலை, நெடுந்தீவு | 10000.00 |
| 08. | D/JF/2020/08 | | பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி | 10000.00 |
| 09. | D/JF/2020/09 | | பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் | 50000.00 |
| 10. | H/LS/2020/01 தொடக்கம் 10 வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | பருத்தித்துறை (அ), பருத்தித்துறை (ஆ), சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பளை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், வேலணை, நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் | 3000.00 |
| 11. | RDHS/CLE-ME/ 2020-2021 | சுத்திகரிப்பு பொருட்களுக்கான வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | 10000.00 |
| 12. | NP/RDHS/PC/ 2020/01 | Photocopier Service Toshiba – 40 Cannon-27 Gestner – 04 Sharp - 06 | பிரதேச வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய பணிமனை, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் | 25000.00 |
| 13. | NP/RDHS/IC/2020/ 02 | Intercom Repair | ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி | 10000.00 |
| 14. | NP/RDHS/AC/ 2020/03 | Airconditioner Service (Mechanical Service, Pump down Service, Normal Service, Gas filling 1kg)(Brand Singer, LG, York, American air & other brand) 9000BTU 12000BTU 18000BTU 24000BTU 36000BTU 60000BTU | பிரதேச வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய பணிமனை, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் | 10000.00 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 021 222 3725, 021 222 6253, 021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்கமுடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 29 யூலை 2020 ஆம் திகதிவரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் 30 யூலை 2020 ஆம் திகதி 10:00 மணிக்குமுன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலை மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 24 யூலை 2020 ஆம் திகதி மாலை 14:00 மணிக்கு நடைபெறும்.
8. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
9. இவ்விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக் குழுதலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு (பெரிது)**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**

(C-9900)

**021 222 3725, 021 222 6253, 021 221 4966, தொலைநகல் : 021 222 9971, மின்னஞ்சல் :** rdhsjaffna15@gmail.com

## ரயில் மோதியதில்...

உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழில் இருந்து கல்கிசை நோக்கிப் புறப்பட்ட யாழ்தேவி புகையிரதத்துடன் மோதுண்டே குறித்த முதியவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த முதியவர் ரயிலுடன் மோதுவதற்கு சற்று நேரத்திற்கு முன்பு சாவகச்சேரி புகையிரத நிலைய பாதைக்கு அருகில் நின்றதாகவும், இதனை அவதானித்த புகையிரத நிலைய ஊழியர்கள் அவரை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்திய போதிலும் சற்றுநேரத்தில் புகையிரத நிலையத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் உள்ள ரயில் பாதையில் ரயிலுடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

முதியவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த முதியவர் பெரும்பான்மை இன மொழியில் ரயில் நிலைய ஊழியருடன் உரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## வவுனியாவில்...

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் சிறுமி ஒருவரின் சடலத்தினை நேற்றுக் காலை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை வெகு நேரமாகியும் குறித்த சிறுமியை காணவில்லை என உறவினர்களால் தேடிய சமயத்தில் வீட்டின் அறையில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக இருப்பதனை உறவினர்கள் அவதானித்துள்ளனர்.

அதன் பின்னர் இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டெடுத்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் டவாலிகா பிரபாகர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## கொள்ளையடித்த...

தப்பித்த கொள்ளையர்கள் மூவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி பட்டப்பகலில் இடம்பெற்றது.

சந்தேகநபர்கள் மூவரில் இருவர் புன்னாலைக்கட்டுவன் அன்னமார் கோவிலடியிலும் ஒருவர் ஏழாலையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகேஸ்வரி (வயது-78) என்ற வயோதிபப் பெண்ணின் வீட்டுக்குள் கடந்த 8ஆம் திகதி மதியம் முகங்களை மூடியவாறு 3 பேர் நுழைந்துள்ளனர். அவரின் கழுத்தில்,கத்தியை வைத்து அச்சுறுத்தி 5 இலட்சம் பெறுமதியான நகையும் 25 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பித்தனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அன்றைய தினம் வயோதிபப் பெண்ணால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்தப் பெண்ணின் வீட்டுக்கு அண்மையாகவுள்ள சிசிரிவி வீடியோ பதிவுகளின் ஆதாரங்களைக் கொண்டு 3 பேரையும் மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

அதனடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டனர். (ம-3)

## வவுனியாவில் 12...

தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மூன்று வாகனங்களும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலையில் இருந்து நேற்று முன்தினம் மாலை வரை வவுனியா பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளின்போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தேர்தல் விதிமுறையை மீறி சுவரொட்டிகள் காட்சிப்படுத்தியமை, தபால் மூல வாக்களிப்பு பகுதியில் பிரசாரம் முன்னெடுத்தமை, தேர்தல் விதிமுறைக்கு மாறாக வாகனங்களில் தேர்தல் சுவரொட்டிகள் கொண்டு சென்றமை, வாகனங்களில் வேட்பாளர்களின் படங்களை காட்சிப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

## யாழ்.மாவட்ட...

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை சார்பாக போட்டியிடவிருந்த வேட்பாளர் ஒருவர் நேற்றையதினம் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகஸ்தீன் மக்டொனால்ட் (வயது-58) என்ற நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இம்முறை இடம்பெறவிருந்த பாராளுமன்ற தேர்தலில் விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை சார்பாக சுயேட்சைக்குழு 14இல் இலக்கம் ஒன்றில் போட்டியிட விருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## மார்ச், ஏப்ரல், மே...

களுக்கும் அறவிடப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் மார்ச் நடுப்பகுதி முதல் நாட்டில் ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகளால் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மின்சாரக் கட்டணம் அதிகளவில் அறவிடப்பட்டதாக பாவனையாளர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்ட நிலையில் அக்குழுவின் பரிந்துரை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மின் பாவனையாளர்கள், பெப்ரவரி மாத மின் பட்டியல் குறிப்பிடப்பட்ட கட்டண அளவையே மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு செலுத்த முடியும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

## கொரோனா பரவி...

சட்டத்தைப் பிறப்பித்து நாட்டை முடக்க வேண்டி வரும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க எச்சரித்துள்ளார்.

எனினும் கொரோனா இன்னும் சமூக மட்டத்தில் பரவாததால் நாட்டுக்கு இன்னும் ஆபத்து ஏற்படவில்லை எனவும் சுட்டிக் காட்டினார். (ம-3)

## இன்று முதல்...

மாத்திரமே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கண்டிப் பகுதியில் 600 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தி குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ம-3)

## யாழ்.உள்ளிட்ட...

யல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதனை அவர்கள் உதாசீனப் படுத்தியுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

எனவே சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் துரிதமாக வர்த்தமானிப்படுத்தப்பட்டால் மாத்திரமே இவற்றுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் கூறினார்.

மேற்கூறிய விடயங்களை சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் புதன்கிழமை ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் சந்தித்து கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் வர்த்தமானிப் படுத்தப்பட்டால் சட்டத்தை மீறும் செயல்களின் அடிப்படையில் எம்மால் ஏதேனுமொரு நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் சுட்டிக் காட்டினார்.

மேலும் இந்த சந்திப்பின்போது கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பொதுத் தேர்தலை சுகாதார பாதுகாப்புடன் நடத்துவது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டதோடு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முகங்கொடுத்துள்ள தொழில் ரீதியான சில இடர்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்டார். (ம-3)

## கொரோனா தக...

னைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையிலிருந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் விலகியிருக்கிறது. இது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கையை சுகாதார அமைச்சு மாற்றியமைக்கிறதா என்ற சந்தேகத்தை தோற்றுவித்திருப்பதுடன், இது மிகவும் பாரதூரமான விடயமாகும். அரசாங்கத்தினால் வழங்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் தீவிர சந்தேகம் எழுந்திருக்கும் நிலையில், கொரோனா வைரஸினால் ஏற்பட்டுள்ள உண்மையான தாக்கம் குறித்த தகவல்களை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருக்கிறார்.

விசேடமாக தனது டுவிட்டர் ▶02


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/07/2020 சீட்டிழுப்பு இலக்கம் 1037
R 7 8 2 6 6 1

செவன
திகதி 15/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 278
F 06 21 62 68

மஹஜன சம்பத
திகதி 2020/07/15
சீட்டிழுப்பு இலக்கம் 4184
L 1 9 7 9 5 1

மெகா பவர்
திகதி 15/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 551
O 11 07 19 48 57

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2479
Z 34 39 53 73

සංවර්ධන වාසනාව உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 349 திகதி 15.07.2020 வர்ணம் நீலம்
R 14 17 35 8
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 55,436,676
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி
வெற்றி வாரம் 2862 வர்ணம் பச்சை திகதி 15.07.2020
17 25 26 52 மகரம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,341,102
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 981 வர்ணம்: இளஞ்சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 2020.07.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,234,070/-
25 37 45 63 W

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3338 திகதி: 2020.07.15 பச்சை புதன்கிழமை
30 46 56 68 A
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 33,301,205/-
Web: www.dlb.lk

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமை போல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
(C-9634)
0768226240

விற்பனைக்கு
குளிர்சாதனப் பெட்டி
சிசில் 4 அடி ஒற்றைக் கதவு
விற்பனைக்குண்டு.
தொடர்பு (3317)
55, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி நாச்சிப்பிள்ளை ஆறுமுகம் (இராசமணி)



கொடிகாமம் ஆத்தியடி வீதியைச் சேர்ந்த திருமதி நாச்சிப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் நேற்று (15.07.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும் வேலுப்பிள்ளை, வேலாயுதபிள்ளை, காசிப்பிள்ளை, இராசபூபதி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பகவதிப்பிள்ளை(சந்திரா), நாகேந்திரன்(சுவிஸ்), கலாநிதி(பவளம்), மகேந்திரன்(சுவிஸ்), தயாபதி(சுவிஸ்), சிவமதி, காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் மங்களேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சேனாதிராசா, அமுதா, காலஞ்சென்ற இரத்தினசிங்கம், சிவமலர், விக்னேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவிதாள் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆத்தியடி
கச்சாய் வீதி, கொடிகாமம். (3319)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 09 - 07 - 1945



உதிர்வு 13 - 07 - 2020

## கணபதிப்பிள்ளை குலசிந்தாமணி

மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குலசிந்தாமணி 13.07.2020 (திங்கட்கிழமை) அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - அரியமணியின் அன்பு மகனும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் யுகவேந்தனின் அன்புத் தந்தையும் இந்துஜாவின் மாமனாரும் செல்வரத்தினம் (கிளிநொச்சி), மத்மநாதன்(நயினாதீவு), கனகரத்தினம் (வேலணை), பன்னீர்செல்வம்(மொறட்டுவ) ஆகியோரின் சகோதரரும் பூபாலசிங்கம், தவமணிதேவி(லண்டன்), ஞானேஸ்வரன்(லண்டன்), மகேந்திரன்(பிரான்ஸ்), குணேஸ்வரன்(பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம்(லண்டன்), சிவலோகசெங்கா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 19.07.2020 (ஞாயிற்றுக்கிழமை) லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (3316)

நந்தாவில் அம்மன் கோவில்,
கொக்குவில்.
Viber இல. 00447434117617

தகவல்: அ.பூபாலசிங்கம்
தொ.இல:- 077 948 4978

# மரண அறிவித்தல்



## திருமதி மல்லிகாமலர் முத்துலிங்கம் (செட்டிமலர்)

**தோற்றம் - 01.05.1941 மறைவு - 15.07.2020**

பருத்தியடைப்பு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மல்லிகாமலர் முத்துலிங்கம் நேற்று (15.07.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் ரூபா (இலண்டன்), புனிதலிங்கம் (அமெரிக்கா), லோகா (இலண்டன்), யோகேஸ்வரன் (உடையான்-சுவிஸ்), ஜீதா (வட்டுக்கோட்டை), புவனேந்திரன் (இலண்டன்), லக்ஸ்மணன் (இலண்டன்), ரூபராஜ் (இலண்டன்), கல்பனா (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கருணா, நிர்மலாதேவி (அமெரிக்கா), அன்ரனிதாசன் (அமுதம்-இலண்டன்), மேனகா (சுவிஸ்), சிவரஞ்சன் (வட்டுக்கோட்டை), டவீந்திரராணி (இலண்டன்), நிஷா (இலண்டன்), லோஜினி (இலண்டன்), ரூபிகாந்தன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பானுஜா (இலண்டன்), டிசிகேசன் (இலண்டன்), புருசோத்மன் (அமெரிக்கா), அட்சி (இலண்டன்), லோஜிதா (சுவிஸ்), தேசிகன் (சுவிஸ்), தேவா (சுவிஸ்), காமாட்சி (சுவிஸ்), விதுர்சன், கீர்த்தன் (தமிழன்பு/தமிழிதன்), சேதா, சீரன், மணியரசன் (இலண்டன்), ஈகைநிலவன் (இலண்டன்), மதியரசன் (இலண்டன்), கதிர் (இலண்டன்), விதுசா (இலண்டன்), ஐஸ்வர்யா (இலண்டன்), கர்ணி (இலண்டன்), நிலவன் (இலண்டன்), கார்த்திகேயன் (இலண்டன்), நிரிசா (இலண்டன்), கனிபன் (இலண்டன்), மருதினி (இலண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பருத்தியடைப்பு இல்லத்தில் இன்று (16.07.2020) வியாழக்கிழமை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊருண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தியடைப்பு,
ஊர்காவற்றுறை.

தகவல்
குடும்பத்தினர்

(3320)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.